
20 காசு

# காஞ்சி

10 69 நிறுவனர்: அண்ணாதுரை

6-12



## உள்ளே....

★


படமும்-பாடமும்! 4
(தம்பிக்கு மடல்)

வாழ்க காந்தியடிகள்!
நிலைக்க அவர் புகழ்!
(தலையங்கம்)

அன்பளிப்பு
(சிறுகதை)

மறை மொழியும்
குறை மொழியும்
(கட்டுரை)

முகப்பில:
காந்தியடிகள்

# பெங்களூர்-பெருமை பெற்றது!

"தமிழக நாளேடுகள், கட்சியினைப் பிளவுபடுத்தும் போக்கிலே செயல்படுவதனைத் தடுக்கும் வகையில், த.நா கா. தலைவர் சுப்பிரமணியம் நடவடிக்கை எடுக்கவேண்டும் இன்றேல் தலைவர் பதவியை துறந்து விட்டு, கொங்குநாடு போய்விடுவது மேல்"

—என்று 7—9—69 "காஞ்சி" இதழில் நண்பர்க்குப் பகுதியில் எழுதியிருந்தது, இதனைச் சீக்கிரம் செயல்பட்டுவிடும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கமுடியாது தான்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியை திரு. சுப்பிரமணியம், வீசி எறிந்துவிட்டு 'இந்தா பொறுக்கிக் கொள்' என்று போய்விட்டார், சென்றகிழமை! முழுதாக ஒரு திங்கள்கூட முடியவில்லை.

காங்கிரசுக் கட்சிக்குள் குடிபுகுந்த ஒரு சிலரால், அவர்கள் மேற்கொண்ட சில பல நடவடிக்கைகளின் எதிரொலியால் கட்சித் தலைவருக்கு இந்தக் கதியேற்பட்டு விட்டிருக்கிறது. பாவம், சுப்பிரமணியம்!

காமராசர்மீது சில, பல குற்றச் சாட்டுக்களை அடுக்கிக் கூறிவிட்டு, அதன் அடிப்படையில் தம் பதவியைத் துறந்திருப்பதானது மக்களின் சிந்தனைக் குரியதாகும்.

குற்றச் சாட்டு, காமராசர்மீது. பிரதமருக்கு எதிராகச் செயல்பட்டார்—படுகிறார் என்று. காமராசருக்குக் கோபம் வரவில்லை. மாறாக, எஸ். கே. பாட்டிலுக்கும், நிஜலிங்கப்பாவுக்கும் பொததுக்கொண்டு வந்திருக்கிறது கோபம்! இவர்கள் தனக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் காமராசரும் கொஞ்சம் பேசிப் பார்த்திருக்கிறார், அமரர் அண்ணாவைத் துணைக் கழைத்துக்கொண்டு,

அறிக்கை மேல், அறிக்கை விட்டுக் கொண்டிருந்த ஒரு சூழலில் அறிஞர் அண்ணா அவர்கள் திரு, சுப்பிரமணியத்தை "அவர் ஒரு அறிக்கைத் தலைவர்" என்று வருணனை செய்திருந்தார். அதனைப் பயன்படுத்தி சுப்பிரமணியத்தைத் தாக்க நினைத்திருக்கிறார், பாவம் காமராசர்!!

காமராசரைப் பற்றி நாட்டிலுள்ள ஏடுகள், இதழ்கள் அனைத்தும் இதுவரையில் தந்துள்ள கருத்துரைகள் அனந்தம்! அவற்றையெல்லாம் இப்போது சுப்பிரமணியம் திரும்ப எடுத்துப் போடுவதானால், அவற்றின் கனம் தாங்காமல் காமராசரே நசுங்கிப் போகக்கூடும்.

காந்தி நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை யொட்டி காமராசர் பலபட வாய் மடுத்திருக்கிறார். பொதுமைத் தத்துவங்களைப் பற்றியும் தாராளமாக வார்த்தைகளை உகுத்திருக்கிறார். இவற்றிற்கிடையே சுப்பிரமணியனார் பற்றியும் 'கொஞ்சம்' பேசி இருக்கிறார்.

சுப்பிரமணியனாரின் குற்றச்சாட்டு, பிரதமர் பதவியைப் பறித்துச் சவானுக்குக் கொடுப்பதாகக் கூற்றுனர் என்று ஒன்று. பதில் கூறக் கடமைப்பட்டிருப்பவர்கள் இருவரே யாகும். ஒருவர் காமராசர், மற்றவர் சவாண்.

சவாணிடம் இதுபற்றிக் கேட்டபோது சிரித்துக் கொண்டே போய்விட்டார் என்பது இதழ்கள் தந்த செய்தி. காமராசரிடம் கேட்டபோது, அறிஞர் அண்ணா அவர்களின் வருணனையை மட்டும் பதிலாகத் தந்திருக்கிறார்! குற்றச்சாட்டை மறுக்கிறாரா? ஒப்புக்கொள்கிறாரா? என்பதற்குத் தெளிவில்லை.

சுப்பிரமணியம், தன் அடுத்த வினாவாக இது நாள் வரையில் முக்கியப் பொறுப்புக்களைத் தந்தது ஏன் என்றும் கேட்டிருக்கிறார். பதில் வரவில்லை இது வரையில்.

நேரடியாக மோதுதல் தொடங்கிவிட்ட பிறகு சுவையான தகவல் கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

இந்தியப் பிரதமர், இந்திரா காந்தியை தமிழகக் காங்கிரசுக்கட்சி அழைத்து தமிழகச் சுற்றுலாவுக்கு வழி செய்திருக்கிறது அவர் செல்லுமிடங்களில் எந்த ஊரிலும் ஊழியர் கூட்டங்கள் இல்லையென்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். சிரிக்கத் தோன்றுகிறது. கட்சி விஷயமாக அழைத்து! கட்சித்தொண்டர்களோடு தொடர்புண்டாக்கக்கூடிய நிலையில் இல்லை அந்தக் கட்சி! அனைத்தும் சுப்பிரமணியனாரின் விலகல் எதிரொலி!

நாட்டின் பிரதமர் ஒரு மாநிலத்துக்கு உலா வருகிறார். அந்த மாநிலத்தில் அந்தப் பிரதமர் சார்ந்திருக்கிற கட்சி தத்தளித்துக்கொண்டிருக்கிறது. முக்கிய காரணம், காமராசர் ஆதரவாளர்கள் என்று கூறப்படுவோர், கட்சியை அந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டிருக்கிறார்கள். காமராசரோ, தன் வேடத்தில், கலைத்துக் காட்டிவிட்ட கோபத்தில், கலத்தில் விழுந்திருக்கிற ஓட்டை பற்றிய எண்ணமற்றுக் கிடக்கிறார்.

புதுக்காங்கிரசுக்காரர்கள் நினைத்தது நடந்து விட்டது; காமராசர் உள்ளிட்ட பலறை அவர்கள் 'பலி' கொண்டு பாதிக் காங்கிரசைக் கலைத்தது போலாகும்.

காந்தி நூற்றாண்டு விழா, இதுபோன்ற அவலத்துக்கிடையே நடைபெற வேண்டிய நிலைபற்றி இனியும் காமராசரும் அவரது அடிவருடிகளும் நினையாது போனால்

மீதமுள்ள பாதியையும் கலைத்துவிட்டு விருதுநகருக்குப் போய்விட நேரிடுவதைத் தடுக்க முடியாது.

யாரை நொந்து என்ன ஆகிப் போகிறது? காலா காந்தி என்று அழைக்க வேண்டுமென ஆசைப்படுகிறார் காமராசர்! அழைக்கவும் முன்வருகிறார்கள் சிலர்! அழைப்பில் காங்கிரசின் அழிவும் சேர்ந்து வருகிறது என்பதை உணர்ந்துகொள்ளும் ஆற்றல் அந்தக் காலா காந்திக்கு இல்லையே!

தமிழகத்தில் இனி காங்கிரசுக்கு எதிர்காலம் இல்லை என்றாக்கிக் காட்டி பெங்களூர் — பெருமை பெற்றுவிட்டது! வாழ்க பெங்களூர்!

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 5—10—69 | இதழ் 12

# வாழ்க காந்தியடிகள்! நிலைக்க அவர் புகழ்!

கத்தியின்றி, ரத்தமின்றி சுதந்திரப் போரை நடாத்திய காந்தியடிகள் பிறந்து நூறு ஆண்டுகள் முடிந்து விட்டதனை, கோலாகலமாகக் கொண்டாடிக் களித்துக் கொண்டிருக்கிறது நாடும், நானிலமும், இந்தக் கிழமை.

"ஈஸ்வர அல்லா தேரே நாம்" என்று கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் எடுத்துக் காட்டி பேசியும், பேசியபடி வாழ்ந்தும், இந்து - முஸ்லிம் இனவேற்றுமையைப் போக்க அரும்பாடு பட்டு இந்த வேற்றுமைக் காதவே, துப்பாக்கிக் குண்டுகளுக்குத் தன் இன்னுயிரையும் பரிசாகத் தந்த பெம்மான் காந்தியடிகள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் குஜராத் மாநிலத்தில் பிறந்தாலும். அவர் உலகம் முழுமைக்கும் பொதுவானவராக இன்று கருதப்பட்டு, அவரது நூற்றுண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடிக் களிக்கிறதென்றுல்—அதன் பொருள் உலக மக்கள் அனைவருக்குமாக, அனைவரின் சுகதுக்கங்களுக்குமாக அவா வாழ்ந்தார் என்பதுவேயாகும்.

காந்தியடிகள். இந்திய சுதந்திரத்தை முன்னிறுத்தி அதன் கா ணமாகப் பேசிய பேச்சுக்களும், எழுதிய எழுத்துக்களும் இன்று தத்துவ உண்மைகளாய், உவமைகளாய் உலகத்தாரால் எடுத்தாளப்படுகிறது என்றுல், காந்தியடிகளது சொல்லும், செயலும், எண்ணமும் எழுச்சியும் எந்த அளவுக்குத் தீர்க்க தர்சனமுடையதாய் இருந்தது என்பதனை நினைந்து, நினைந்து பெருமைகொள்ள முடியும்.

துரதிருஷ்டவசமாக காந்தியடிகளது போதனைகளையும், தத்துவங்களையும் இன்று நாடு எண்ணிப் பார்த்துக் களிக்கவேண்டிய அளவுக்கு மட்டுமே இருக்கிறது என்பதனையும் எடுத்துக்காட்டியே தீர வேண்டும்.

எண்ணிப்பார்த்துக் களித்தல்—என்றுல் செயல் வடிவத்தில் அது இன்றைக்கு இல்லை என்ற பொருளினைப் பெற சங்கடப்பட வேண்டியிருக்காது.

காந்தியடிகளது போதனைகளை இன்று அரசினரும் சரி, அரசினரால் ஆளப்படுவோரும் சரி, கடைப்பிடித்து ஒழுகுகிறுர்கள் என்ற நிலை, நடைமுறையிலிருக்குமானுல், அண்மையிலே ஆமதாபாத்துக்கள் நிகழ்ந்திருக்க இடமில்லை. அதுவும் நூற்றுண்டு நினைவுக் காலத்தின் கடைசீ நேரத்தில் அப்படி நிகழ்ந்திருக்க முடியாது.

பெரியார் ஒருவரின் போதனைகளையும், வாழ்க்கைத் தத்துவங்களையும் மேடை போட்டுக் காட்டி ஏறி நின்று விண் எட்ட முழங்கி, பெருமை பேசிக் கலைந்துவிடும் போலித்தனமான வாழ்க்கைக்கு அரசும் மக்களும் முழுமையாகத் தம்மை ஒப்படைத்துவிட்ட இரங்கத்தக்க நிலைமையே இவற்றிற்கெல்லாம் காரணங்களாக இருக்கக்கூடும்.

காந்தியடிகள் மீதான உண்மையான பற்றும் பாசமும், அவர் வகுத்தளித்துச் சென்ற தத்துவங்களின் மீது ஒரு உண்மையான பிடிப்பும் இருந்திருக்குமானுல் ஆட்சியாளரும் அதன் தலைமையும் நாட்டில் இவ்வளவு பெரிய அலங்கோலத்தை அண்மையில் உண்டாக்கி விட்டிருக்கமாட்டார்கள்.

அரசு எவ்வழி, மக்கள் அவ்வழி என்ற மூதுரைக்கேற்ப, அரசு மேற்கொண்ட அலங்கோலக் கொள்கைகள் காரணமாக மக்களும் போலித்தனமான வாழ்க்கையில் பூரிப்பும் பொலிவும் காணத் தலைப்பட்டிருக்கிறுர்கள்.

பெருமையினைப் பேசிக் களித்தல் என்பதுகூட ஒரு வகையில் ஒருவகையான நாகரிக நடைமுறை என்றுகிவிட்டிருக்கிறது.

தென்னுப்பிரிக்காவிலும் சரி, அதனைவிட்டு இந்தியா திரும்பிய பின்னரும் சரி, காந்தியடிகள். மக்கள் சகோதரத்துவத்தோடும், சமத்துவத்தோடும் பழக வேண்டும் எனபதனைப் பன்னிப்பன்னிக் கூறி வந்திருக்கிறுர்.

சமத்துவம்—சகோதரத்துவம் என்பது சுவையான முழக்கமாக்கப்பட்டிருக்கிறது இந்த இடைக்காலத்தில். உரிமைவேட்கையில் செலுத்திய நாட்டத்தின் அளவுக்கு கடமை உணர்ச்சியில் அக்கறைகாட்டத் தவறி இருக்கிறது நாடு.

பொது வாழ்க்கையின் உயர்வுக்கு, தனிமனிதனின் கடமைகள் எனச் சில இருக்கின்றன என்பதனைக்கூட ஏற்கக்கூடிய அறிவாற்றலினையும் மனிதன் இழந்துவிட்டிருக்கிறுன்—இந்த நூற்றுண்டில்! காந்தியடிகளது மறைவுக்குப்பின்! அரசியல் சூழல்கள்தான் அவனை அப்படி ஆக்கி விட்டிருக்கின்றன.

தூய்மைவாழ்க்கை, அகிம்சைக்கொள்கை என்பனவெல்லாம் ஏடுகளோடும் மேடைகளோடும் நின்று விட்டிருக்கின்றன இன்று. இவற்றையெல்லாம் கடந்த 1968 அக்டோபர் 2-ம் நாள் முதல் 1969 அக். 2ம் நாள் வரையில் மீண்டும் எழுதியும் பேசியும் புதுப்பித்துக்கொண்டு வந்திருக்கிறது நாடு.

அமெரிக்கத் தூதுவரான கென்னத் கீட்டிங் என்பார், "இன்று காந்தியடிகளின் போதனைகள், இந்தியாவுக்கு மட்டுமல்ல. அமெரிக்காவுக்கும், உலகம் முழுமைக்குமே தேவைப்படுகின்ற அறிய அறிவுரைகளாகும்" என்று அண்மையில் பேசி இருக்கிறுர்.

சத்தியவாழ்க்கையும், அகிம்சா நெறியும், சமத்துவ சகோரத்துவ கோட்பாடும் இன்று உலக முழுவதுக்குமே தேவைப்படக் கூடிய நிலையில்தான் இருக்கிறது என்பது கீட்டிங் அவர்களது நிலை. ஆயினும். இந்தியத் துணைக் கண்டத்தின் பிதா வென்றும், சுதந்திரத்தின் தந்தையென்றும் எந்தவொருவரை போற்றுகின்றேமோ அந்த ஒருவர் பிறந்த நாட்டிலேயே அமைதியின்மை

(14-ம் பக்கம் பார்க்க)

# மறை மொழியும் குறை மொழியும்

—புலவர் கோ. அண்ணாமலை—

தமிழகத்தில் நீண்ட நெடுங்காலமாகச் சூழ்ந்திருந்த அறியாமை இருளை மூடநம்பிக்கைகளால் விளைந்த கேட்டைப் போக்குவதற்குப் பெரியார் இராமசாமி தோன்றினார் என்று நாம் சொன்னால், தமிழகத்தின் வரலாற்றை எழுதப் புகும் எந்த வரலாற்றாசிரியனும் அதை ஏற்காமல் மறுத்துவிடமாட்டான்.

சாதியின் பெயராலும், சமயத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் இந்த நாட்டில் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளுக்குக் கணக்கில்லை. அறியாமையும் மூடநம்பிக்கையும் இந்தத் தமிழ்மக்களை விட்டு விலகாதிருக்கும்வரை நம்முடைய கொள்ளை தடையில்லாமல் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்என்று எண்ணி மகிழ்ந்தவர்களுக்கு ஒரு வெடிகுண்டாய் வந்தவர் பெரியார் இராமசாமி! அவர் குப்பை அரசியல் நடத்த வந்தவரல்ல! தன்னுணர்வு அற்றுக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்குத் தன்னுணர்வு ஊட்ட வந்த தந்தை! மூடநம்பிக்கைகளுக்கு ஆட்பட்டு முதுகெலும்பில்லாமல் மூலையிலே முடங்கிக் கிடந்த தமிழர்களை முன்னேற்ற வந்த மூல மனிதர்! அறியாமைப் பூட்டினை உடைத்துத் தமிழர்களின் உள்ளத்தில் அறிவு விளக்கை ஏற்றிவைத்த ஏந்தல்! சங்கத் தமிழும் சிங்கத் தமிழனும் வாழ்வாங்கு வாழவேண்டும் என்று விரும்பிய வெண்தாடி வேந்தர்!

தமிழகத்தில் அவர் காலடிபடாத சிற்றூரில்லை; அவர் பகுத்தறிவு வாதத்தினைக் கேளாத மனிதரில்லை. மக்களிடம் இருந்த மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்க அவர் நடத்தாத போராட்டமில்லை. அவர் எதிர்த்துப் பேசாத அநீதி இல்லை. அல்லும் பகலும் தாழ்ந்த தமிழ் மக்களின் உயர்வுக் கென்றே உழைத்து வாழ்ந்தவர் — வாழ்கிறவர்! அவர் தன்னுடைய வெண்தாடி வெளியிலே தெரிய எந்தச் சிற்றூரின் சாலையிலே வண்டியில் அமர்ந்து பயணம் செய்தாலும் அங்கே மாடுகள் மேய்த்துக்கொண்டிருக்கும் அறியாச் சிறுவன்கூட, 'அதோ பெரியார் போகிறார்—பெரியார் போகிறார்' என்று கிளர்ச்சியுடன் கூவுவான். அவரை அறியாத ஒரு சிறுவனைக்கூட இந்த நாட்டிலே நாம் காண இயலாது. அவ்வளவு காலம் — அவ்வளவு முறை தமிழகத்தின் மூலை முடுக்குகளில் சுற்றிச் சுற்றிப் 'பகுத்தறிவு' விளக்கேற்றியவர்.

'கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போக வேண்டும்' — என்று இராமலிங்க அடிகள் பாடினார். இன்னும் 'சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே, சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானத்து அலைகின்ற உலகீர், அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே'' என்றும் பாடினார். அதனைக் கேட்டவர் யார்? அவர் சொன்ன சண்டைகளை விட்டொழித்தவர் யார்? கண் மூடிப் பழக்கங்கள் அழியட்டும் என்று மனமார விரும்பிப் பாடுபட்டவர் யார்?

'சாதிகள் இல்லையடி பாப்பா—குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்'' என்று பாடினான் பாரதி. கேட்டவர்கள் யார்? அதன்படி நடந்தவர்கள் யார்?

பாவம் இராமலிங்கமும் பாரதியாரும்! அவர்களால் பாடத்தான் முடிந்தது—வேறொன்றும் செய்ய முடியவில்லை,

ஆனால் பெரியார் இராமசாமி பாரதியாரைப்போல இராமலிங்கனாரைப்போல பாடினாரா—இல்லை; இல்லவே இல்லை; கேடுதரும் சாதி சமயங்களைச் சாடு சாடென்று சாடினார்! அவருடைய சாடுதலுக்குத்தான் சரிந்தது சாதிக்கோட்டை! ஆம் யாராலும் எதனாலும் சரிக்க முடியாத—வீழ்த்த முடியாத சாதிக் கோட்டையை, சாதிக்கோட்டைப்—பெரியார் தன்னுடைய சாடுதலால் மட்டும் சரித்துக் காட்டினார். இது இந்த தலைமுறையின் சரித்திரம்! ஏதென்ஸ் நகரத்து இளைஞர்களைச் சிந்திக்கவைத்தான் சாக்ரடீஸ், ''ஏன் என்று கேளுங்கள், அந்தக் கேள்விதான் அறிவுப் பூட்டிற்குத் திறவுகோல்'' என்று சொல்லிக் கொடுத்தான் அங்கே ஒரு சாக்ரடீஸ் இங்கே ஒரு பெரியார்!

சிந்தனையாளர் அஞ்சாநெஞ்சினர் இந்த நாட்டில் புரையோடிவிட்ட தீமைகளை உணர்ந்தவர். அவற்றிற்குத் 'தன்னுடைய முறையில்' மருந்துவம் செய்தவர்; அதில் வெற்றியும் கண்டவர்.'

அண்மையில் இத்தகைய ஒரு சமுதாயச் சிற்பிக்குச் சிலையெடுத்தனர். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அதனைத் திறந்து வைத்தார், அந்தச் சிலையிடையில் அவர் சொன்ன மொழியை சுறித்திருக்கின்றனர்.

குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு அதனைப் படித்தவுடன் கோபம் பொத்துக்கொண்டு வருகின்றதாம்! 'இந்துப் பத்திரிகை'யின் வாயிலாகத் தங்கள் கோபத்தினைக் கொட்டி—'சிறுபொறி பெருநெருப்பாக' வேண்டுமென்ற நைப்பாசையில் எழுதித் தீர்த்திருக்கின்றனர்.

போதாக் குறைக்கு ''குமுதம்'' வேறு. அதன் எழுத்துக்கள் அனைத்தும் அட்சரம் லட்சம் பெறும் என்ற எண்ணம். தமிழகத்தின் அரசியலில் குட்டை குழப்பவிடும் கொள்கை கொண்டது அந்த ஏடு. தன் தலையங்கத்தின் மூலம் பெரியாரின் தஞ்சைச் சிலைபற்றியும், அதிலே பொறிக்கப்பட்டிருப்பது குறித்தும், கண்டனம் தெரிவித்துள்ளது. நாடெல்லாம், ஏடெல்லாம் போர்க் கோலம் பூண வேண்டுமென்று ஆசைப்படுகிறது குமுதம்.

சிலையுடன் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பது ஒருபக்கம் இருக்கட்டும். அதனை அவர்தானே சொன்னார்? அவர் சொன்னதை அவர் சிலையில் எழுதுகின்றனர். அதில் என்ன தவறு? எழுதியிருப்பதைக்கூடாது என்பவர்கள் சொல்லியிருப்பதையும் கூடாது என்று சொல்வதுதானே. ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில், இந்துப் பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார், இப்படியெல்லாம் எழுதக்கூடாது என்று சொல்லி நீதிமன்றத்துக்குப் போனால், உடனே அவற்றை அழித்துவிடச் சொல்லி விடுவார்களாம்!

அவர் நீதிமன்றத்துக்கு ஏன் இவ்வளவு காலங்கடந்து போக வேண்டும்?

பெரியார் அந்த மொழிகளைச் சொன்னபோதே நீதிமன்றத்தில்

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

தமிழகத்தின் தனிச்சிறப்பினை இலக்கியமும், வெட்டுண்டும் சிதறுண்டும் கிடக்கும் நிலையில் மட்டுமே கிடைத்திடும் வரலாறும் காட்டும்போது எனக்கு மன எழுச்சி உண்டாவதுபோலவே எவருக்கும் உண்டாகத்தானே செய்யும் நாட்டுச் சிறப்புப்பற்றி அறிந்திடும்போது, அனைவரும் மகிழத்தான செய்வர்—அந்த உணர்ச்சி, 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாக' அமைகிறது.

பொல்லாத புலவர்கள், ஏனோ இவ்வளவு அழகுபட, உள்ளத்திலே உவகை பொங்கிடத்தக்க வகையில் நந்தம் நாடுபற்றப் பாடினரோ, என்று திகைத்துக் கேட்டிட வேண்டி நேரிடுகிறது, இன்று நம கண்முன் நெளியும் நிலைமைகளுடன், புலவர்கள் பாக்கள் மூலம் காட்டிடும் தமிழக நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்த்திடும்போது.

தமிழக வரலாறு நற்தாயகவரலாறு என்ற முறையில் என் உள்ளத்தில் உவகையை உண்டாக்குவது இயற்கைதான்—ஆனால் அதற்கு அடுத்தபடியாக என் மனதுக்கு எழுச்சியைத் தரத்தக்கதாக, மராட்டிய மண்டல வரலாறு அமைகிறது. என்னென்ன வீரக்காதைகள்! எத்துணை எத்துணை தியாகங்கள்! ஏரோட்டியவன் எதிரியை விரட்டிட வாளேந்தியதும், தலைவாரிப் பூச்சூடி மகிழத்தக்க பருவத்தினள் குதிரை ஏறி மாற்றானைப் போரிட்டு விரட்டியதும், கீர்த்திக் கணவாயில் குருதி கொட்டியேனும் நாட்டை மீட்டிடக் கிளம்பிடும ஆற்றல் படையினரின் அஞ்சா நெஞ்சமும், காணக்காண நெஞ்சு நெக்குருகும்.


மராட்டிய மண்டலம், அன்று அரசு பெற்று, அணியெனத் திகழ்ந்தது; இன்று அரசு இழந்து அல்லற்படுகிறது; எனினும் அந்த மக்கள் நாட்டுப்பற்றை இழந்தாரில்லை; தம் பண்டைப் பெருமையை மறந்தனரில்லை; மறவாதது மட்டுமல்ல, பெருமையை மீட்டிட முடியும் என்று உறுதிபூண்டு, இதுபோது பணியாற்றி வருகின்றனர்.

இந்த மாபெரும் எழுச்சியின் ஒருசிறு கூறுதான், சம்யுக்த மராட்டிய சமிதி எனும் முயற்சி; இந்த முயற்சி, நம்பிக்கை தருவதாக அமைந்துவிட்டது! மராட்டிய மண்டலத்திலே, காங்கிரஸ் மேலிடம் இழைத்த அநீதியை எதிர்த்து, கொடுமைக்கு ஆளானவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, காங்கிரசுக்குத் தக்க பாடம் கற்பிக்கவேண்டும், என்பதற்காகவே அமைத்தனர் புதிய முகாம்—சம்யுக்த மராட்டிய சமிதி. வெவ்வேறு கட்சிகளை நடாத்திக் கொண்டு வருபவர்கள் — தத்தமக்கென்று தனிக் கொடியும் படையும் கொண்டுள்ளோர்— இந்த ஒரு நோக்கத்துக்காக, தமது ஆற்றலை தனித்தனியே செலவிட்டால் சிதறுண்டு போகும் என்பதற்காக; ஒரு தனி முகாம் அமைத்து, கூட்டுவலிவு காட்டிக் காங்கிரசை எதிர்த்தனர்—135—இடங்களில் 100 இடங்களில் வாகைசூடினர்.

இங்கு இதுபோன்ற முயற்சி வெற்றிபெறவில்லை!

உள்ளதை மறைத்திடாமல் பேசுவது என்றால், இங்கு காங்கிரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும், போட்டி எத்துணை கடுமையோ, அதனினும் கடுமையாக, காங்கிரசுக்கு எதிர்

# படமும் பாடமும் (4)



புக் கட்சிகளாக, உள்ளவைகளுக்குள் இருந்து வந்தன!

காங்கிரஸ் வெற்றி பெற்றாலும் கூடப் பரவாயில்லை இந்தக் கழகம் வெற்றிபெறக்கூடாது-என்பதை மேடையிலேயே பேசிடச் சிலர் கூசவில்லை.

எது எந்த நாசமாகப் போனாலும் பரவாயில்லை. பார்ப்பானோ பாதகனோ, மொண்டியோ முடமோ கூனோ குருடோ, ஊர்க்குடி கெடுப்பவனோ ஊமையோ கழுகோ வெளவாலோ, காட்டானோ காவாலியோ, எவன் வெற்றி பெற்றாலும், பரவாயில்லை இந்த கண்ணீர்த்துளிகள்' மட்டும் வெற்றிபெறக் கூடாது — அதைக் காண நேரிடுமானால் எமக்கு உள்ளவை கண்களல்ல, புண்கள்!!—என்று பேசிடும் அளவுக்கு அநாகரீக அரசியல் படமெடுத்தாடிற்றே!!

மராட்டியத்திலே, உரிமைக்காக அனைவரும் ஒன்றுபட்டு நின்று, காங்கிரசை எதிர்த்துப் போராடினர்...எனவே 135-ல் 100 இடங்கள் வெற்றிபெற முடிந்தது.

இங்கு, நிலைமை வேறு; மராட்டியம்போல இங்கு, காங்கிரசை எதிர்த்து நிற்கும் கட்சிகள் ஒன்றை ஒன்று ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற எண்ணம்கொள்ளாது ஒன்றுக்கொன்று துணை நிற்கவேண்டும் என்ற திட்டத்தை அமுலாக்கி, கூட்டுச் சக்தியைக் காட்டி இருந்தால், காங்கிரசுக்கு இத்தனை 'அமோகமான' வெற்றி கிடைத்திருக்காது.

மொத்தத்தில், சென்னை மாநிலத்திலே, காங்கிரசுக் கட்சிக்கு ஆதரவாகத் தரப்பட்ட ஓட்டுகளைவிட, காங்கிரசுக் கட்சிக்கு எதிராகத் தரப்பட்ட ஓட்டுகளின் எண்ணிக்கையே அதிகம்.

தொகுதிகளைத் தனித்தனியே பார்க்கும்போது, பதறப்பதற, எதிர்க்கட்சிகள் 'பங்குச் சண்டை' போட்டுக்கொண்டதால் மட்டுமே காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றிருப்பதைக் காணலாம்!

எதிர்க்கட்சிகளுக்குள் ஒரு உடன்பாடு, ஒத்துழைப்புத் திட்டம் இருந்திருக்குமானால், காங்கிரசுக்குச் சரிவு, சரிக்கட்ட முடியாத அளவுக்கு ஏற்பட்டிருந்திருக்கும்.

எதிர்க்கட்சிகள், ஒன்றை ஒன்று மதிக்க மறுத்ததும், உடன்பாடு குறித்து உரையாடி முடிவு காண தகுந்த முறை, தக்க சமயத்தில் ஏற்படாமற் போனதும், காங்கிரசுக்கு 'அமோக' வெற்றி தேடிக்கொள்ள வழி தந்தது.

மக்கள் பேரில் குற்றம் கூறுவதற்கில்லை.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை நாங்கள் வெறுக்கிறோம், எதிர்க்கிறோம். மீண்டும் அந்த எதேச்சாதிகாரத்தை அனுமதிக்க விரும்போம் என்று மக்கள் தமது 'தீர்ப்பை' தெளிவுடன், துணிவுடன், அச்சமதயை தாட்சணியத்துக்குக் கட்டுப்படாமல் அளித்துள்ளனர்; மக்கள் பேரில் குறை இல்லை—குற்றமத்தனையும் மக்களை நடத்திச் செல்வதாகக் கூறப்படும், தலைவர்களிடமே இருந்திருக்கிறது.

தம்பி! திருவையாறு தொகுதியில் காங்கிரஸ் கட்சியை ஆதரித்துக் கிடைத்த 'ஓட்டுகள்' 19722; காங்கிரஸ் கட்சியை எதிர்த்து மக்கள் போட்டுள்ள ஓட்டுகள் 26138—என்றாலும் வெற்றி பெற்றவர், காங்கிரஸ் அபேட்சகராக நின்ற சுவாமிநாத மேற்கொண்டார் என்பவர்! இந்த விசித்திரத்துக்குக் காரணம் என்ன? காங்கிரசை எதிர்த்துத் திருவையாறு தொகுதி மக்கள் 26138 ஓட்டுகள் அளித்தனர் — ஆனால் அவை மொத்தமாக ஒருவருக்குப் போய்ச் சேரவில்லை. ஆளுக்குக் கொஞ்சமாகப் பலர் பிய்த்து எடுத்துக்கொண்டு விட்டனர்.

| | |
|---|---|
| பட்சிராஜன் | 8270 |
| சுயம்பிரகாசம் | 8077 |
| இராதாகிருஷ்ணன் | 4648 |
| இராமலிங்கம் | 4096 |
| திருவேங்கிடத்தான் ஐயங்கார் | 1047 |

இப்படி, காங்கிரசுக்கு எதிர்ப்பான ஓட்டுகள் சிதறிப் போயுள்ளன! இவர்கள் அனைவரும் தோற்றனர்—மொத்தமாக 19722 ஓட்டுகளைத் திரட்டிக்கொள்ள முடிந்த மேற்கொண்டார் எனும் காங்கிரசுக் கட்சியார் வெற்றிபெற்றார்!

திருவையாறு தொகுதியிலே காங்கிரசு வெற்றி பெற்றது என்று விழாக்கொண்டாடி, காங்கிரசின் செல்வாக்கினைப் பாரீர் என்று சிந்து பாடுவர்! ஆனால் தொகுதி மக்களிலேயோ, 26138 பேர் காங்கிரசு கூடாது, ஆகாது என்று கருதுகிறார்கள்—16722 வாக்காளர் மட்டுமே, காங்கிரஸ் கட்சி வேண்டும் என்று தீர்ப்புக் கூறினர்.

26138 மக்கள், காங்கிரஸ் கட்சி கூடாது, ஆகாது என்று தீர்ப்பளித்தும், பலன் கிடைக்காமற் போனதற்குக் காரணம் என்ன?

ஆளுக்கு ஒரு துண்டு எடுத்துக்கொள்வோம், என்று கூறி பத்து ரூபா நோட்டை, ஐந்து பாகமாகக் கிழித்து, ஆளுக்கு ஒரு துண்டு எடுத்துக்கொண்டால், எப்படியோ அப்படி ஆகிவிட்டது, இந்தச் சம்பவம்.

காங்கிரசு கூடாது, ஆகாது என்பதைக் குறித்திடும் தீர்ப்புச் சீட்டுகளை—'ஓட்டுகளை'—மக்கள் மொத்தமாக ஒருவரிடம் அளித்திருந்தால், காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றிருக்க முடியாது — திருவையாறு, காங்கிரஸ் கோட்டை என்று பேசிப் பெருமைப்பட முடியாது! ஆனால் காங்கிரசு கூடாது என்பதைக் குறித்திடும் தீர்ப்புச்சீட்டுகளில் 8270—நமது கழகத் தோழர் பட்சிராஜனிடமும், 8077—சீட்டுகளை, காங்கிரஸ் சீர்திருத்தக் குழுவினருடன் கூடிக்கொண்ட சுயம்பிரகாசம் அவர்களிடமும் என்று இம்முறையில் ஐந்து தோழர்களிடம், ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக, 26138—ஓட்டுகளைப் பிரித்துப் பிரித்து கொடுத்துவிட்டனர் — பத்து ரூபாய் நோட்டு கிழித்துக் கொடுக்கப்பட்டது—துண்டுகளாக்கப்பட்டன—பலன் இல்லாமற் போய்விட்டது.

திருவையாறு தொகுதியில் 26138 மக்கள் காங்கிரசை எதிர்த்து 'ஓட்டு' அளித்தும், காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுவிட்டதன் மர்மம் இதுதானே!

காங்கிரசை எதிர்த்து ஓட்டு அளிக்க வேண்டுமென்று முடிவு செய்த அந்த 26138 வாக்காளர்களும் தத்தமது அறிவு, ஆராய்ச்சி, தொடர்பு தோழமை, தெளிவு ஆகியவற்றுக்குத் தக்கபடி, காங்கிரசை வீழ்த்தக்கூடியவர் இவராகத்தான் இருக்கவேண்டும், இவருக்கு ஆதரவு அளித்தால்தான் காங்கிரஸ் கட்சியை முறியடிக்க முடியும், என்று முடிவு செய்து, அதற்குத் தக்கபடி ஓட்டுகளைத் தந்தனர். இவ்வளவு 'அபேட்சகர்கள்' காங்கிரசை எதிர்க்கும்போது, காங்கிரஸை

எதிர்த்தொழிக்க எண்ணும் வாக்காளர்கள், குழப்பமடைவதும், அதன் பயனாக ஓட்டுகள், சிதறுவதும் தானே நடக்கும்.

காங்கிரசை எதிர்த்த அத்தனை அபேட்சகர்களும், காங்கிரஸ்கட்சி கூடாது, ஆகாது. அதற்கு ஓட்டளிக்கக் கூடாது என்று முடிவு செய்து கொண்டுள்ள வாக்காளர்களைச் சந்தித்தபோது, காங்கிரஸ் கட்சியை வீழ்த்தும் ஆற்றல், காங்கிரஸ் கட்சியினால் ஏற்பட்டுவிட்ட கேடுபாடுகளைப் போக்கும் வலிவு எனக்கு உண்டு, எனக்குத்தான் உண்டு, காங்கிரசை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு உங்களிடம் ஓட்டு கேட்க வருகிறார்களே, மற்றவர்கள், அவர்களுக்கு அந்த ஆற்றலும் கிடையாது, வெற்றி பெறும் வாய்ப்பும் இல்லை; எனக்கு ஓட்டு அளித்தால் மட்டுமே காங்கிரசை வீழ்த்த முடியும்! என்று பேசியிருப்பர். வாக்காளர்கள் இதுபோல நாலாபக்கமும் பிடித்து இழுக்கப்பட்டதால், முடிவு நைந்துபோய்விட்டது.

“காங்கிரஸ் கட்சி கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன், ஆனால், காங்கிரசை வீழ்த்த, கழகத்தானால் முடியாது, நம்ம சுயம் பிரகாசம்தான் அதற்குச் சரியானவர் என்று 8077-வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது; இல்லை, இல்லை; என்ன இருந்தாலும், திராவிடபார்லிமெண்டரி கட்சி என்று சட்டசபையில் இருக்கும்போது கூறிக்கொண்ட அதே சுயம்பிரகாசம் அவர்கள், இப்போது இழுத்தவன் பின்னோடு போகிற போக்கில், காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியிலே சேருகிறாரே, இப்படிப்பட்டவரை ஆதரித்துப் பலனுமில்லை, ஆதரிப்பது நியாயமுமல்ல நாம் நமது கழகத்துப் பட்சிராஜனைத்தான் ஆதரிக்கவேண்டும் என்று 8270 வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது; இத்தனை தொல்லை எதற்கு, ஐயங்கார் ஸ்வாமிகளை ஆதரித்துவிட்டுப் போவோம், அவர்தான் காங்கிரசை ஒழித்துக் கட்டக்கூடியவர் என்ற எண்ணம் 1047-வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது; காங்கிரஸ் சர்வாதிகாரத்தை முறியடிக்க மற்றவர்களை ஆதரித்தால் பயன் இல்லை; சம்மட்டி அடிக்க வேண்டும்; சரியான ஆசாமி இதற்கு, கம்யூனிஸ்டுதான். ஆகவே, அவருக்குத்தான் ஓட்டு அளிக்கவேண்டும் என்ற எண்ணம் 4096-வாக்காளர்களுக்குத் தோன்றியிருக்கிறது!

மொத்தத்திலோ 26138 — வாக்காளர்களுக்கு, காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணம்.

இதேபோலப் பல தொகுதிகளிலும், நிலைமை ஏற்பட்டுவிட்டது; மொத்தத்தில் காங்கிரசை எதிர்த்து வாக்காளர்கள் தீர்ப்பு அளித்திருக்கின்றனர்; ஆனால் தீர்ப்புச் சீட்டுகளை, பல்வேறு பெட்டிகளிலே பிரித்துப் பிரித்துப் போடவேண்டிய நிலைமை—மக்களால்கூட அல்ல—தலைவர்களால் ஏற்பட்டுவிட்டது.

அதனால்தான் தம்பி! மச்கள் பேரில் குறை கூறுவதற்கில்லை, குற்றம் ‘தலைவர்கள்’ பேரில்தான் என்று கூறினேன்.

நமது இராஜேந்திரன் தொகுதி தேனியைப்பாரேன். நாடகமாடி நாடாளலாமா என்ற தத்துவம் கக்கினார்களே சிலர், இரண்டிலும் திறமையற்றவர்கள், அவர்கள் எதிர்பார்க்கவில்லை. சென்னையில் பல ஆண்டுகளாக வாசம் செய்து கொண்டுள்ள அந்த இளைஞன், தேனி தொகுதியில் பெற்றிருக்கும் செல்வாக்கின் அளவை. 31,404 வாக்குகளல்லவா. கிடைத்திருக்கிறது. “மணிமகுடத்துக்கு!!” காங்கிரசுக்குத்தான் வெற்றி. ஆனால் வெற்றிபெற்றவருக்கு விருது என்ன தெரியுமா! இராசேந்திரனைத் தோற்கடித்த தேனி தியாகராஜன்!! பார்த்தாயா, தம்பியின் சமர்த்தை தியாகராஜனுக்கு. பத்மபூஷணம் பட்டம்போல் இப்போது இராசேந்திரன் பெயர் பயன்படுகிறது!! இதே போலச் சென்னையில், கூட்ட விளம்பரச் சுவரொட்டி கண்டேன்—கேலிக்காக நானாக இட்டுக்கட்டிக்கொண்டு கூறினேன் என்று காங்கிரசார் யாராவது எண்ணிக்கொள்ளப்போகிறார்கள். 38,185 வாக்குகள் பெற்றார் தியாகராஜன். காங்கிரஸ் வெற்றிபெற்றது; தேனி தேசியக் கோட்டை என்று பெருமைப்படட்டும்—வேண்டாமென்றுகூற, நாம், யார்?

ஆனால், தேனி தொகுதி மக்களின் தீர்ப்பு என்ன?

காங்கிரஸ் அபேட்சகருக்கு வெற்றி கிட்டிற்றே தவிர, 46712 மக்கள், காங்கிரஸ் கட்சி கூடாது. ஆகாது. என்றல்லவா தீர்ப்பளித்துள்ளனர். 38,185 வெற்றிபெற்றது! 46712 தோல்வியுற்றது!! காரணம், தெரிகிறதல்லவா?

31,404 வாக்காளர்கள் காங்கிரஸ் கூடாது. ஆகாது, என்ற தம்முடைய தீர்ப்பினை, இராசேந்திரன் மூலமாக, நாட்டுக்கு அறிவித்தார்கள்; 15,308 வாக்காளர்கள், காங்கிரஸ் கூடாது என்ற தீர்ப்பை, சீர்திருத்தக் கமிட்டி சார்பில் போட்டியிட்ட, அருணாசலம் என்பவர் மூலம், நாட்டுக்கு அறிவித்தனர்; மொத்தத்தில் காங்கிரஸ் கூடாது என்று தீர்ப்பளித்தவர் தொகை 46712!! நோட்டு கிழிக்கப்பட்டுப்போய்விட்டது! ஓட்டு சிதறிவிட்டது, காங்கிரஸ் வெற்றியைத் தட்டிப் பறித்துக்கொண்டது.

தேனி, காங்கிரசுக்கா ஆதரவு காட்டியிருக்கிறது? இல்லையே!!

பல்வேறு தொகுதிகளிலே, காங்கிரசுக்கு இதே முறையிலேதான் வெற்றியைத் தட்டிப்பறித்துகொள்ள முடிந்திருக்கிறது!

கொடைகானல் தொகுதியில் கழகத் தோழர் குருசாமிக்குக் கிடைத்த 17452 வாக்குகளுடன், காங்கிரசை எதிர்த்த சுயேச்சை ஞானவரம் என்பவருக்குக் கிடைத்த 5365-வாக்குகளையும் கூட்டி, வெற்றி கிட்டியது என்ற நிலை பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் அனகிரிசாமியார் பெற்ற 21,107 வாக்குகளுடன் ஒப்பிட்டுப் பார், தவறு, மக்கள் மீது அல்ல, என்ற பாடம் கிடைக்கும்!

அரியலூரில், தம்பி, 31048 வாக்காளர்களை, 11 744 வாக்காளர்கள் தோற்கடித்திருக்கிறார்களே, தெரியுமா!!

காங்கிரஸ் கூடாது என்று 31,048 வாக்காளர்கள் தீர்ப்பளித்தனர். ஆனால், கழகத்தோழர் நாராயணனிடம் 10 404 ஓட்டுகள் மட்டுமே தந்தனர்; 6992 வாக்குகளை அப்துல்காதர் என்பாரிடமும், தனராஜ் என்பவரிடம் 4797 வாக்குகளும் மாணிக்கம் என்பவரிடம் 3069 வாக்குகளும், 2640 வாக்குகளை அரசன் என்பவரிடமும் 2154 வாக்குகளை தங்கவேலு என்பாரிடமும் தந்துள்ளனர்; கொடுத்தவரையில் கொடுங்கள் என்று 992 வாக்குகளை வடிவேலு என்பவர் பெற்றிருக்கிறார்.

இத்தனைபேரும் காங்கிரசை எதிர்த்து நின்றவர்கள்!

இவர்களில் ஒவ்வொருக்கும் ஓட்டு அளித்தபோது வாக்காளர் எண்ணிக்கொண்டது, காங்கிரசை வீழ்த்த

## அடுத்த இதழில்

# அறிஞர் அண்ணா

அவர்களின்

# விழாவும்--விளக்கமும்

## என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

நமது 'ஓட்டு' பயன்படுகிறது என்பதுதான்! ஆனால் நடைபெற்றதோ, வாக்காளர்களில் மிகப் பெரும்பாலோர் விரும்பாதது, எதிர்பாராதது; 11.744 வாக்குகள் மட்டுமே பெற்று, காங்கிரஸ் அபேட்சகர் இராமலிங்கப் படையாச்சி என்பவர் வெற்றிக்கொடி நாட்டினார்—மூலைக்கு ஒருவராக நின்று கொண்டு, முழக்கமிட்டவர்களில், யாருக்கு வாக்களித்தால் காங்கிரை ஒழித்துக்கட்டலாம் என்பதில் மக்கள் குழப்பமடைந்தனர்; ஓட்டுகள் பிளவுபட்டன; காங்கிரஸ் பிழைத்துக் கொண்டது!

அரியலூரில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றார், ஆனால் அந்தத் தொகுதியில் காங்கிரசுக்குச் செல்வாக்கு என்று கூறிட முடியாது, எதிர்ப்பாளர்கள் 31,048; ஆதரவாளரின் தொகை 11 744 மட்டுமே!

தங்கவேலுவோ, வடிவேலுவோ, அரசனோ அப்துல்காதரோ நாமேன் வீணாக ஓட்டுகளைப் பிரியச் செய்வது, கழகத்துக்குத்தான் கைகொடுப்போமே என்று மட்டும் எண்ணியிருந்திருப்பின், நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று பாரேன், தம்பி! 10404 வாக்குகளல்லவா பெற்றிருக்கிறார், நாராயணன் எனும் நமது கழகத்தோழர்! வெற்றி எக்காளமிட முடிகிறது காங்கிரசால்; பெற்ற வாக்குகளோ, 11.744!!

பாபநாசம் தொகுதியிலும் இதே நிலைமை—காங்கிரசுக்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகள் 38971—காங்கிரசை எதிர்த்து அளிக்கப்பட்ட வாக்குகள் 50761!! ஆனால், இந்த எதிர்ப்பு ஓட்டுகள் ஐந்து பெட்டிகளில் பிரிந்து பிரிந்து விழுந்தன!

மதுராந்தகம் தொகுதியில் 57619 வாக்குகளை, காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் மூவர், பங்குபோட்டுக் கொண்டு தோற்றனர்; 24402 வாக்குகளைத் திரட்டி காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி தேடிக்கொள்ள முடிந்தது.

ஆலங்குடித் தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரசுக்கு 28447 ஓட்டுகள்—காங்கிரசைத் தோற்கடிக்க 36686 வாக்காளர்கள் திரண்டனர். ஆனால் நமது கழகத் தோழர் சுப்பையா 18444 வாக்காளர்களையும், பாலகிருஷ்ணன் எனும் சுயேச்சையாளர் 18242 வாக்காளர்களையும் தத்தமது முகாமுக்கு அழைத்துச் சென்றனர்; தோல்வி தாக்கிற்று!

சூலூர் தொகுதியில்: காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற கடமை உணர்ச்சியில் 22777 வாக்காளர்கள் இருந்திருக்கின்றனர்—மூவர் பங்குபோட்டுக் கொண்டதால் 18328 வாக்குகள் பெற்ற காங்கிரஸ் காரிகை வெற்றி பெற்றார்.

கந்தர்வகோட்டைத் தொகுயில் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற முடிந்தது—ஆனால் தொகுதி எத்தகைய கோட்டை என்பதைப் புள்ளிவிவரத்தைப் பார்த்தபிறகு, காங்கிரஸ் நண்பர்களையே சொல்லச் சொல், தம்பி.

| | |
|---|---|
| இராமச்சந்திரதுரை | 9839 |
| தங்கமுத்து நாட்டார் | 8558 |
| மாரிமுத்து உடையார் | 1638 |
| தர்மராஜமேற்கொண்டார் | 1115 |
| இரங்கசாமி உடையார் | 1051 |

ஆகமொத்தத்தில் 22196 வாக்குகள், காங்கிரசுக்கு எதிர்ப்பாக அளிக்கப்பட்டன! வெற்றிபெற்ற காங்கிரஸ் அபேட்சகர் கிருஷ்ணசாமி கோபாலருக்கு 18928 வாக்குகள் மட்டுமே தரப்பட்டன!!

தர்ம பிரபுக்கள்! இப்படி ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு, ஓட்டுகளை ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கு போட்டுக் கொண்டிராவிட்டால், வெற்றியாவது நமக்குக் கிட்டுவதாவது, என்று உள்ளூர கும்மிடிபூண்டி தொகுதியில் வெற்றி தேடிக்கொண்ட கமலாம்புஜம் அம்மையார் எண்ணாமலிருந்திருக்க முடியுமா, என்பதை அந்தத் தொகுதியில் ஏற்பட்ட நிலைமையை ஆராய்ந்து பார்ப்பவர் நிச்சயம் அறிந்து கொள்வர்.

அங்கு ஐந்து அபேட்சகர்கள் காங்கிரசை எதிர்த்தனர்

ஒவ்வொருவரும், காங்கிரசை வீழ்த்தக்கூடியவர்கள் என்ற நம்பிக்கையை, வாக்காளரிடம் பரப்பியதில், மக்கள் குழப்பமடைந்து, எந்த 'அம்பு' காங்கிரசை வீழ்த்தும் கூருள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியாதுபோய்விட்டது.

| | |
|---|---|
| வேணுகோபால் ரெட்டியார் | 8908 |
| துஷ்யந்தராஜா | 7768 |
| மாரிமுத்து | 3998 |
| P. B ஜீவரத்னம் | 3152 |
| கன்னையய நாயுடு | 888 |

மொத்தம் கூட்டிப் பார்க்கும்போது கமலாம்புஜம் அம்மையாருக்குக் கலக்கமாகத்தானே இருக்கும்! 24714 - வாக்குகள், காங்கிரசுக்கு எதிர்ப்பாக! அம்மையாருக்குக் கிடைத்ததோ 9002!!

துஷ்யந்தராஜாவும் வேணுகோபாலரும், அல்லது மாரிமுத்துவும் துஷ்யந்தராஜாவும், நிலைமையைப் பரிசீலனை செய்து, தோழமை தேடி, காங்கிரசை வீழ்த்த நமக்குள் போட்டி இருக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டிருந்தால்? எண்ணும்போதே, வெற்றி பெற்ற அம்மைக்கு முகம் எப்படி இருக்கும்?

வேணுகோபால ரெட்டியாரும் கன்னைய்ய நாயுடுவும் தோழர்களாகி விட்டிருந்தால்கூட அல்லவா, ஆபத்து!!

பெட்டிகள் பல—அதன் பலன் காங்கிரசுக்குத்தான்!

மதுரையில் கழகம் இத்துணை எழிலும் ஏற்றமும் பெற்றும், வெற்றி காங்கிரஸ் அபேட்சகருக்குக் கிடைத்ததே என்று நம்மில் பலர் திகைத்திடுகிறோம். உண்மை என்ன? காங்கிரஸ் வெற்றி பெறவில்லை — காங்கிரஸ்

அபேட்சகர் வெற்றி அடைந்திருக்கின்றார்! வாக்காளர்களிலே பெரும்பாலோர் காங்கிரசுக்கு எதிர்ப்பாகத்தான் தீர்ப்பு அளித்தனர்—ஆனால் நாலு வெவ்வேறு பெட்டிகளில் அந்த எதிர்ப்பு ஓட்டுகள் பிரிந்து பிரிந்து விழுந்தன: காங்கிரஸ் அபேட்சகரின் பெட்டிக்கு 20 305 வாக்குகள் விழுந்தன—அவர் வெற்றி பெற்றார். 9872 வாக்குகள் நமது முத்துவுக்கும் பாகுலேயன் எனும் [illegible] சேவியர் [illegible] 7878 வாக்குகளும் விசுவநா[illegible] எனும் கா. சீ. க. 4565 முத்துமாலை [illegible] 528 [illegible] பெற [illegible] காங்கிரஸ் அபேட்சகரை வெற்றி [illegible] விட்டனர்.

முசிறி [illegible] நமது கழகத் தோழர் முத்துக்கருப்பன் 18[illegible]7 வாக்குகள் பெற்றார் — முத்தையா எனும் காங்கிரஸ் அபேட்சகர் 34427 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்; அவ்வளவு செலவாக்கா காங்கிரசுக்கு என்று மலைக்கத் தோன்றுகிறதல்லவா? விளக்கத்தைக் கண்டால், [illegible] உண்மை புலனாகும். கா. சீ. க. அபேட்சகர் 15986, கம்யூனிஸ்டு தோழர் 11548, சுயேச்சை 4206 வாக்குகள் பெற்றனர்—மொத்தத்தில் காங்கிரசுக்கு எதிர்ப்பாக 50342 வாக்குகள்!! எதிர்ப்பாளர் பலர்!! எனவே, காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற முடிந்தது.

தூத்துக்குடியிலும் இதே சேதி! சட்டசபை உறுப்பினராக முடியாது போய்விட்டதல்லவா நமது கழகத் தோழர் சிவசாமி அவர்களால்! பெற்ற வாக்குகள் 16298—ஆனால் அவர் போல காங்கிரசை எதிர்த்து கம்யூனிஸ்டு முருகானந்தம் 14661 வாக்குகள் பெற்றார்—இருவருமாக, காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகளைப் பங்கு போட்டுக் கொண்டதால் 17438 வாக்குகள் பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் சட்டசபைக்கு வெற்றி வீரராக வருகிறார்.

தி. பழூர் தொகுதியில் நமது கழக அபேட்சகர் 15,602 வாக்குகள் பெற்றார்-காங்கிரஸ் எதிர்ப்பு வாக்குகளை கா. சீ. க. தோழர் 7276 பிரித்துக் கொண்டார்—காங்கிரஸ் அபேட்சகர் 17 522 வாக்குகள் பெற்று, வாகை, எனக்கு என்றார்.

கடலூரில் 30135 வாக்குகள் காங்கிரசுக்கு எதிர்ப்பாக! ஆனால் அது அவ்வளவும் ஒரே பெட்டியில் இல்லை. நமது கழகத்து இளம்வழுதி 13091 பெற்றார், [illegible]ஸ். கே. சம்பந்தம் 17044 பெற்றார்—காங்கிரசு அபேட்சகர் 21.100 வாக்குகள் பெற்று எம். எல். ஏ. ஆகிறார்!

ஆம்பூர் தொகுதியில், நமது கழகத் தோழர் சம்பந்தம் 25 105 வாக்குகள் பெற்றார்—25,562 வாக்குகள் காங்கிரஸ் அபேட்சகருக்குக் கிடைத்து, வெற்றி கிட்டிற்று—ஆனால், தம்பி! அந்த வேதனையைப் பார், காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகளில் 14592 ஒரு கா. சீ. க. மடக்கிக்கொண்டார் ஆம்பூர் மக்கள் பேரில குறை கூற என்ன இருக்கிறது? 39697 பேர் காங்கிரசு கூடாது. ஆகாது என்று தீர்ப்பு அளித்துத்தான் இருக்கிறார்கள்.

வடசென்னை காங்கிரசுக்கு எதிர்ப்புக் கோட்டை என்று எக்காளமிட்டு வந்தீர்களே, ஏன் உங்கள் ஜீவரத்தினம் தோற்றார் என்று காங்கிரசில் தரம் குறைந்த சிலர் கேட்கும்போது எனக்கு, வேதனையாகத்தான் இருக்கிறது—தரம் குறைவாக காங்கிரஸ்காரர், வெற்றி பெற்ற காங்கிரசார் 11 770 வாக்குகள் வாங்கினர் என்பதையும் நமது ஜீவரத்தினம் 11 279 வாக்குகள் பெற்றார் என்பதையும் அறிகின்றனர்—அகமகிழ்ச்சிக்கோ பெருமைக்கோ இடமில்லை என்பதை உணருகின்றனர்! அது கிடக்கட்டும் ஒருபுறம்; வடசென்னையில் காங்கிரசுக் கட்சிக்குச் செல்வாக்கு இருக்கிறதா? இதென்ன பைத்தியக்காரத்தனமான கேள்வி—மாயாண்டி நாடார் வெற்றி பெற்ற பிறகு, உனக்கு அந்தச் சந்தேகம் எழலாமா? என்று சிலர் கேட்பர். மாயாண்டி நாடார் எனும் காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றார் என்பதை மறந்து பேசவில்லை; அவர் வெற்றி பெற்றார். ஆனால் அது காங்கிரசுக்கு வெற்றியாகுமா? காங்கிரசுக்கு எதிராக வடசென்னைத் தொகுதி குவித்துள்ள வாக்குகள் 28.143!! ஆதரவாகக் கிடைத்தவை 11 770!! நால்வர், பங்கு போட்டுக் கொண்டனர், எதிர்ப்பு வாக்குகளை! நோட்டு துண்டாக்கப்பட்டு விட்டது!!

இதுபோலப் பலப் பல தொகுதிகள்! ஸ்ரீவில்லிபுத்தூரில் காங்கிரஸ் எதிர்ப்பு ஓட்டுகள் 57992—காங்கிரஸ் ஆதரிப்பு ஓட்டுகள் 49498!!

பென்னாகரத்தில், காங்கிரசுக்கு ஆதரவு அளித்தோர் 8791—எதிர்ப்பு தெரிவித்தோர் 19042!!

மன்னார்குடியில் காங்கிரஸ் வெற்றி பெற விடமாட்டோம் என்று 31171 வாக்காளர்கள் தீர்ப்பளித்தனர்—பெட்டிகள் மூன்று—எனவே 25 ஆயிரம் வாக்குகள் பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் வெற்றியை அணைத்துக் கொண்டார்.

புள்ளி விவரங்களைப் பார்க்கப் பார்க்க, வேதனை தருவதாக மட்டுமல்ல, காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி பெற்றார்களே தவிர, காங்கிரஸ் கட்சி வெற்றி பெறவில்லை என்பது விளக்கமாகும்.

எதிர்ப்பாளர்களுக்குள்ளே இருந்துவந்த பிளவு, காங்கிரஸ் அபேட்சகர்களுக்குச் சாதகமாகி விட்டது; வேறென்ன.

இதுபோலெல்லாம் பிய்த்துப் பிய்த்துப் பார்த்திடலாமா, பத்து ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்தி வருவதுபோலவே இனியும் காங்கிரஸ் கட்சிதானே ஆட்சி செய்யப் போகிறது!—என்று கேட்பார் உளர்.

ஆம்! அதிலே ஐயம் இல்லை! ஆனால் ஆதிக்கம் செலுத்தும்போது, இனிக் காங்கிரஸ் கட்சிக்கு உள்ளூர அச்சம் இருந்து வரும். என்பதை, காங்கிரசுக்கு எதிராகக் குவிந்துள்ள 'ஓட்டுகள்' காட்டுவதைக் கருத்துக் குருடரன்றி பிற யாரும் உணராமலிருக்க முடியாது.

பத்து ஆண்டுகளாக ஆட்சி நடாத்தி வருகிற காங்கிரஸ் கட்சி, தன் சாதனைகளைப் பகட்டான முறையிலே விளம்பரப்படுத்திக் கொண்டும், பல்வேறு நாட்டுத் தலைவர்களை வாழ்த்தி வரவேற்று, 'ராஜோபசாரம்' நடாத்தி, தாஜ்மஹாலையும் அஜந்தாவையும் காட்டி, புலிவேட்டைக்கும் யானை மீது அம்பாரி அமைத்துச் சவாரி செய்யும் பவனிக்கும் ஏற்பாடு செய்து வைத்து, மாமல்லபுரத்துச் சிற்பங்களையும் மகாத்மாவின் சமாதியையும் காட்டி 'புகழுரைகளை'ப் பெறுவதிலும் ஈடில்லா ஆற்றலைக் காட்டி வருகிறது; அது மட்டுமின்றி இன்றளவு வரையில் நாட்டை மீட்டவர்கள், என்ற விருது காட்டி மக்களை மயக்கத்திலாழ்த்தி வைத்து வருகிறது; எனினும், காங்கிரசுக்கு எதிராக மக்கள் அளித்துள்ள ஓட்டுகள் காங்கிரசுக்கு ஆதரவாக உள்ளதைவிட அதிகம். ஜனநாயகத்தில், இந்தக் குறியை அலட்சியமாகக் கருதமாட்டார்கள்.

தம்பி! உன் உழைப்பின் பலனாக, நானும் மற்றும் பதினைந்து நண்பர்களும் சட்டசபை செல்கிறோமல்

ல்வா? அங்கு எவரெவரைக் காணப் போகிறோம். என் பதை எண்ணிப் பார்க்கும்போதே கழகத்துக்குக் கிடைத்த வெற்றி போலப் பத்து மடங்கு வெற்றி காங்கிரசுக்குக் கிடைத்திருப்பினும், அந்த வெற்றியைப் பெற, எத்தகைய விலை கொடுக்கப்பட்டது என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

ராஜா சர். முத்தைய்யா செட்டியார், 'கெம்பீரமாக' அமர்ந்திருக்கக் காண்பேன்—அவரும் நானும் சந்திக்கும்போது, என்னென்ன எண்ண அலைகள் எழும், இருவர் உள்ளங்களிலும்!

சர்தார் படேல் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்து, காங்கிரசுக்கு நிதி திரட்டினார் — தமிழர்கள் ஏமாளிகள், வடநாட்டுத் தலைவர்களிடம் பணத்தை இழந்துவிட்டுப் பல்லிளிக்கப் போகிறார்கள்—இதை நாம் தடுத்தாக வேண்டும் என்று, தீர்மானித்த ராஜா. சர். என்னை வரவழைத்து, படேலிடம் பணம் கொடுக்காதீர்கள் என்று மக்களைக் கேட்டுக்கொள்ள ஒரு அறிக்கை தயாரிக்கச் சொன்னார்—

படேல் வருகிறார்

பணப்பை ஜாக்ரதை!

என்ற தலைப்புடன், அந்த அறிக்கை தயாரானதும், ராஜா, சர், எவ்வளவு குதூகலமடைந்தார்! அவர், காங்கிரஸ்காரராக! நான் எதிர்க்கட்சியில்!! அன்றும் அவர் 'ராஜா!' இன்றும் அதே!! அன்றும் அவர் ஆளும் கட்சியிலே ஓர் உன்னத இடம் பெற்றிருந்தார்! இன்றும் அவருக்கு அதே அந்தஸ்து!! நான், காங்கிரஸ் ஆட்சியை, மக்களுக்கு உகந்ததல்லாதன செய்யும்போது கண்டித்துப் பேச முற்பட்டால், ராஜா, சர். காரசாரமாக' என்னைத் தாக்கக் கூடும்! காங்கிரஸ் கட்சியின் திட்டம் கவைக்கு உதவாது! அதன் போக்கு காட்டுத்தனமானது! என்று அன்று பேசினார்—இன்று கழகமாம் கழகம்—என்ன களகம், மகாகளகம்—என்று பேசுபவர்களின் நடுவில் அமர்ந்து ஒளிவிட இருக்கிறார்.

தம்பி! இந்தக் காட்சியைக் கொண்டு பார்க்கும்போது, கனதனவானின் வெற்றி என்று தலைப்பிடத் தோன்றுகிறதா, காங்கிரஸ் கட்சியின் வெற்றி என்று தலைப்பிடத் தோன்றுகிறதா, என்று கருத்திலே சிறிதாவது நேர்மை உணர்ச்சியுள்ள காங்கிரஸ் அன்பர் இருந்தால் கேட்டுப் பாரேன்!!

காங்கிரஸ் கட்சி 150 இடங்களைப் பிடித்ததாக 'எக்காள'மிடுகிறார்களே, மக்கள் ஏதுமறியாதவர்கள் என்று எண்ணிக்கொண்டு, பிடித்த இடங்களில் அமர்ந்துள்ள பெரியவர்களின் இலட்சணம் என்ன என்று கூறிடச் சொல், கேட்போம்!!

அன்று போலவே அடையாறு அரண்மனை, அரசியலில், தனக்கென ஓர் தனிச் செல்வாக்கைத் தேடிக்கொள்ளும், சுவையையும் சூட்சமத்தையும் நிரம்பப் பெற்றிருப்பது இதிலிருந்து புரிகிறதே தவிர, காங்கிரஸ் கட்சியின் வெற்றியா, இதிலே மணம் வீசுகிறது!!

ராஜா. சர். காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தப்பட்டாரே, அந்தச் சம்பவத்தையே, காங்கிரசின் வெற்றி என்று கூறுவர். உண்மைக் காங்கிரஸ்காரர், "ராஜா, சர். அவாளோட யோக ஜாதகம் அப்பேற்பட்டதாக்கும்!" என்றுதான் வாழ்த்தி இருப்பார்களே தவிர, காங்கிரஸ் கட்சியையா, பாராட்டியிருப்பார்கள்.

அடிபட்டவனும் அவதிப்பட்டவனும், 'தியாகி' என்ற பட்டம் மட்டும் பெற்று, வறுமை கொட்ட, வேலையில்லாத் திண்டாட்டம் வாட்ட கவனிப்பாரற்றுக் கசிந்து கண்ணீர் மல்கிக் கிடக்கின்றனர். இதோ கொலு வீற்றிருக்கிறார், கோடீஸ்வரர்!

அந்தப் 'பாவ'த்திலே, தம்பி, தெரிந்து அல்ல, தெளிவு இல்லாததால், தவறு செய்ய நேரிட்டு விட்டதால், நமக்கும் பங்கு இருக்கிறது.

ராஜா. சர். இரண்டாயிரத்துச் சொச்சம் ஓட்டுகள் அதிகம் பெற்று, 'வெற்றி' பெற்றார்; அந்த இரண்டாயிரத்துச் சொச்சம் ஓட்டுகளை, நமது கழக அபேட்சகர் தான் மடக்கிக்கொண்டார் — அந்த ஓட்டுகள் காங்கிரசை எதிர்த்து நின்றவருக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்—ராஜா, சர், தோற்றிருப்பார்—தவறு நம்முடையது, நம்முடையது என்று எண்ணும் போதெல்லாம், நான் வேதனை அடைகிறேன், மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளத் துடிக்கிறேன்.

இதுபோலப் பல தவறுகளைச் செய்துவிட்டோம்—போதிய அனுபவம் இல்லாததால்!!

இவைகளெல்லாம் சேர்ந்துதான், 150 இடங்களைக் காங்கிரஸ் கட்சிக்குப் பெற்றுத் தந்தனவே தவிர, மக்கள் தங்கள் ஆதரவைக் காங்கிரஸ் கட்சிக்கு, இதய பூர்வமாகத் தந்துவிடவில்லை,

பெற்ற வெற்றியின் தன்மையும் தரமும் ஒருபுறம் இருக்கட்டும் — தம்பி! காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றிருக்கிறார்களே, அவர்களிலே எத்தனை பேர்,

காங்கிரஸ்காரர்கள்

சத்யாக்கிரகிகள்

காந்தீயவாதிகள்

தியாகிகள்

பட்டம் பதவி விட்டவர்கள்

ஏழை பங்காளர்கள்

என்று கூறிடச் சொல்லு, கேட்போம்.

உண்மையிலேயே, 150 இடங்களிலே, 100 இடங்களுக்குமேல், காங்கிரஸ் வெற்றி பெற்றது என்று கூறுவதைவிட, தந்திரம் தெரிந்தோர் காங்கிரசைக் கைப்பற்றிக்கொண்டனர் என்பதுதான் பொருத்தமாக இருக்கும்,

இந்த வெற்றியைப் பெருமைக்குரியதாகக் கருதும், காங்கிரஸ்காரர்கள், சில ஆண்டுகள் கொடிகட்டி ஆளவும் அதன் பயனாக இலாபவேட்டை ஆடவும் வசதி கிடைத்தது என்பதற்காக வேண்டுமானால் குதூகலப் படலாமே தவிர, இது காங்கிரஸ் வெற்றி என்று எங்ஙனம் கூறமுடியும்?

"அடா! அடா! இவ்வளவு எளிதாகக் காங்கிரசை வீழ்த்திட வழி இருக்கும் என்று தெரிந்திருந்தால், நான் மிகச் சிரமப்பட்டு, எதிர்ப்புறம் இருந்துகொண்டு காங்கிரசை வீழ்த்தப் பாடுபட்டிருக்கமாட்டேனே! தொட்டால் துவண்டுவிடும் இந்தத் தோகை மயிலாளுக்காக நான் தோட்டத்துச் சுவருக்கல்லவா கன்னம் வைத்துக் கஷ்டப்பட்டேன்! என்றல்லவா ராஜாசர்கள், பேசிப் பேசிச் சிரித்துக்கொண்டு கிடக்கிறார்கள்.

திடலில் கூட்டம் போட்டு, தீர்த்துக் கட்டிவிட்டோம் கழகத்தை என்று தீப்பொறி பறக்கப் பேசுகிறார்கள் காங்கிரஸ் பேச்சாளர்கள்; அதேபோது, மாளிகை பலவற்றிலே மந்தகாசத்துடன் சீமான்கள், காங்கிரஸ்

கட்சியை எவ்வளவு எளிதாக ஏய்த்துவிட முடிந்தது என்றல்லவா, கூறிக் களிநடமாடுகிருர்கள்,

யாரார், எப்பாடுபட்டேனும், எவ்வளவு பணம் செலவிட்டேனும், என்னென்ன சூது சூழ்ச்சிகள் செய்தேனும், ஆளும் குழுவினராக அமர்ந்தால் மட்டுமே, ஆதிக்கமும் சுயநலமும் அழியாதிருக்கும் என்ற திட்டம் கொண்டவர்களோ—யாரார், மக்களாட்சியிலே தமது உடைமைகளுக்கும் சுரண்டும் தொழிலுக்கும் கேடு வந்துவிடுமோ என்று அச்சம் கொண்டு, அந்த ஆபத்து வராதிருக்க, மக்களாட்சியை வீழ்த்த வேண்டும் என்று எண்ணுபவர்களோ—அவர்களையே அழைத்து, ஆட்சி மன்றத்திலும், ஆட்சிக் குழுவிலும் இடம் தருவதாகக் கூறினுல், கரும்பு தின்னவா கூலி கேட்பர் — தாராளமாகச் சேர்ந்திடலாயினர் — ஏராளமாகப் பணத்தை வீசினர்—வெற்றி கிட்டிற்று—காங்கிரசுக்கு அல்ல—கனவான்களின் கபட திட்டத்துக்கு! எதிர்த்து அழிக்க முடியாததை, அடுத்துக் கெடுத்திட முடிகிறது!!

பிடிபட்டால் தலை போகுமே என்று கிலி கொள்பவனைப் பிடித்திழுத்து, தலையாரி தன் மருமகனுக்கிக் கொள்வதுபோலிருக்கிறதல்லவா!!

இம்முறையில் பெற்ற வெற்றிகள், காங்கிரஸ் கட்சிக்கும் ஊறுதான் தரும்—நாட்டுக்கும் நல்லது கிடைக்காது.

தம்பி! இந்தச் சூழ்நிலையில், நாம் 15 இடங்களைப் பெற்ருேம்; 16 இலட்சம் வாக்குகள் மொத்தத்தில் கிடைத்தன என்பது அவ்வளவு அலட்சியமாகத்தள்ளிவிடக்கூடிய சம்பவமல்ல; ஏசிடுவோர்கூட புதியதோர் எழுச்சியைக் கண்ட மருட்சியால்தான், தமக்கும் தம்மை நம்பியுள்ள கடைசிப் பிரிவினருக்கும் 'தாஜா' தேடிக்கொள்ளும் முறையில் தாறுமாருகப் பேசி வருகின்றனர். நாடு மகிழ்கிறது; வரவேற்கிறது.

15 இடங்களில் வெற்றி பெற்றதற்காக, நமது கழகம் நடத்திய கடற்கரை கூட்டத்தையும் நான் கண்டேன்—150 இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சி அதே கடற்கரையில் நடத்திய கூட்டத்தையும் காண நேரிட்டது. மக்கள் மிக மிக அறிவாளர், என்பதை நான் உணருகிறேன்!!

"அன்று கடற்கரைக் கூட்டத்தை ஒருமுறை சுற்றிப் பார்க்கலாமென்று சென்றேன்—பாதி வளையம் சென்றதும் மேலால் நடக்க முடியாமல், களைத்துப் போய் உட்கார்ந்துவிட்டேன்" என்று நண்பர் எஸ். எஸ். பி. லிங்கம் என்னிடம் சொன்னுர்—காங்கிரஸ் வெற்றி விழாக் கூட்டத்தில், மேடைவரை, மிக எளிதாகச் சென்று, திரும்பிவந்த நிலையில்.

மக்கள் காட்டும் இந்தப் போக்குக்குக் காரணம் இல்லாமலில்லை.

"மகனே! வெந்நீர் தயாராகி விட்டது, வா! குளித்துவிட்டு, சாப்பிட்டுவிட்டு, படுத்துத் தூங்கு. அப்போதுதான் களைப்பு போகும், காலகடுப்பு நீங்கும்" என்று கனிவுடன் கூறி, தாய் மகனுக்கு அன்புடன் உபசாரம் செய்கிருள், ஏழைக் குடிலில்.

அவன் இரண்டே ரூபாய்கள்தான், அன்று கொண்டுவந்தான்!

ஆனுல், அதை அவன் தன் தாயிடம் கொடுக்கும்போது, அன்னை அடைந்த அகமகிழ்ச்சி அளவிட முடியாது.

மற்ருேர் மனை! மாளிகை அல்ல, குடிலுமல்ல வாடகை இடம், சிறிது வசீகரமானது.

"இதைக் கொண்டுபோய், அலமாரியில் வைத்துப் பூட்டு" என்று அலட்சியமாக ஒருவன், சிறு பேழையைத் தருகிருன்—விலையுயர்ந்த வைரமாலை இருக்கிறது, உள்ளே!

பேழையை வாங்கும்போதே, அந்தத் தாயின் கரம் நடுக்கமெடுக்கிறது. முகத்தில் பயக்குறி படருகிறது; பெருமூச்செறிகிருள்.

"கதவைத் தாள்போட்டுவிட்டுப் போய்ப் படு... என்ன போருத வேலையோ! என்ன தீம்பு கொண்டுவரப் போகிருயோ?" என்று கலக்கத்துடன் அந்த மாது பேசுகிருள்.

காட்சிகள் தெரியட்டும் தம்பி! மீண்டும் படித்துப் பார்!!

இரண்டு ரூபாய் கொண்டுவந்த மகனிடம் அன்பு சொரியும் தாய்—வைரமாலை கொண்டு வரும் மகனிடம் வெறுப்பும் பயமும் காட்டும் அன்னை! காரணம் என்ன?

முன்னவன், சந்தைக் கடையில் மூட்டை சுமந்தான்—தம்பி! வெயிலில் பாடுபட்டான், வியர்வை கொட்டக் கொட்ட வேலை செய்தான்—அதற்குத் தரப்பட்ட கூலி, இரண்டு ரூபாய்!

நரம்பு முறிய வேலை செய்து, நாணயமான தொழில் செய்து, அவன் பெற்ற பணம், அன்னையின் கண்களிலே கனிவு கசிந்திடச் செய்கிறது.

மகனே! மகனே! மார்பு உடையப் பாடுபடுகிருய், உன் மாதாவைக் காப்பாற்ற! சந்தைக் கடையிலே உன் தலைமீது, எவ்வளவு 'பாரம்' ஏற்றினுர்களோ! கழுத்து சுளுக்கிக் கொண்டதோ; என்னவோ! எவ்வளவு சுற்றினுயோ! கால் எப்படிக் கடுக்கிறதோ! இல்வளவு கடினமாக உழைத்துச் சம்பாதித்த பணமல்லவா இந்த இரண்டு ரூபாய்! மகனே! ஏழைக் குடும்பம்! நான் உன்னை மாளிகையிலா பெற்றெடுத்தேன்! படாத பாடுபடுகிருய்! ஆனுல், நாணயமாக வாழ்ந்து வருகிருய்! அது போதுமடா, அப்பா! உன் உழைப்பு, நமது குடும்பத்துக்கு உயிரூட்டம் தருகிறது! உத்தமனடா நீ! — என்று, தாயின் கனிவான பார்வை பேசுகிறது.

இளவரசனுக்குக்கூட அந்த வரவேற்பும், உபசரிப்பும் கிடைக்காது—இரண்டே ரூபாய் கொண்டு வரும், கடமையை நிறைவேற்றிய மகனுக்கு அவ்வளவு கனிவுடன் உபசாரம் கிடைக்கிறது.

மற்ருேர் மனையிலே, வைரமாலையைத் தருகிருனே, மகன்—அவன் தாய் ஏன் திகிலுற்றுப் போகிருள்? அவனும் அங்காடி சென்றுதான் அந்த அரிய பொருளைக் கொண்டு வந்தான். காலையில் வெறுங்கையாகச் சென்ருன், மாலையில் மாலையுடன் திரும்புகிருன! தாய் திகிலடைகிருள்! காரணம் புரிகிறதல்லவா! தாய் உணருகிருள், மகன் ஏமாந்தவனிடம், தட்டிப் பறித்துக் கொண்டு வந்திருக்கிருன், வைரமாலையை என்பதை; தலைக்குத் தீம்பு வருமே என்று அஞ்சுகிருள்; மகனிடம் விவரம் கேட்டால் கோபிப்பான்; எனவே பெருமூச்செறிகிருள்.

தட்டிப் பறிக்கப்பட்ட வைரமாலை—மூட்டை சுமந்ததால் கூலியாகக் கிடைத்த இரண்டு ரூபாய்!!

[15-ம் பக்கம் பார்க்க]

# அன்பளிப்பு

—ஜே. வி. நாதன்—

“மெல்லப் போ அண்ணே!...”

லாரியில் ‘லோடு’ அதிகம் இருந்தாலும் வேகத்தைக் குறைக்காமலே ‘ஸ்டியரிங்’கை சுழற்றி, தார் சாலையில் ‘சர்...சர்’ ரென்று திரும்பும்போதும் எதிரே வரும் கார்களை அலட்சியமாக ‘சைடு’ வாங்கும் போதும் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கிளீனர் செல்லத் தம்பிக்குக் குலைநடுங்கியது. பத்தாவது முறையாக அவன் சொன்னான்; ‘மெல்லமாப்போ, அண்ணே’

டிரைவர் பாண்டியன் சிரித்துக் கொண்டான். ஆனால் ஆக்சிலரேடரில் இருந்து காலை எடுக்கவில்லை. வேகம்....வேகம்...வேகம்!

லாரி இருளைக் கிழித்தபடி, பறந்து கொண்டிருந்தது

பொழுது விடிவதற்குள் அவன் சீர்காழியில் இருந்தாக வேண்டும். ‘பார்வதி!......பார்வதி!......’ அவன் மனம் வேதனையில் குமுறியது

“இவ்வளவு நாள் காத்திருந்தாய் இதோ உன் பாண்டியன் ஓடோடி வருகிறேன், பார்வதி! என்னை ஏமாற்றி விடாதே, இன்னொருவனின் உடமையாகி விடாதே!...”

அவன் மன வேகத்திற்கு ஈடு கொடுக்க முயன்று லாரியும் விரைவாகப் பறந்து கொண்டிருந்தது.

• • •

காதல்! ஆகா! அதுதான் எத்தனை விசித்தரமானது! ஏழை டிரைவரான பாண்டியனுக்கு குப்பத்து ஏழைப் பெண் ஒருத்தி காதலியாக வாய்த்திருக்கக் கூடாதா? பணக்கார வீட்டுப் பாவையான பார்வதியா அவன் காதலில் விழ வேண்டும்!

நிலையான வேலை எதுவும் இன்றித் திரிந்துகொண்டிருந்தான் பாண்டியன். எப்போதேனும் லாரிகளில் வழக்கமான டிரைவர் வராவிடில் பாண்டியன் போவான். கிடைக்கிற வருமானத்தில் வயதான தாயையும், இரு தம்பிகளையும் காப்பாற்றியாகவேண்டும்.

எது எப்படியானாலும் தினமும் ஆலயத்துக்குச் சென்று அம்பிகையைத் தொழுவது மட்டும் நிற்காது அவனுக்கு. அம்பிகை நல்வழி காட்டுவாள் என்ற நம்பிக்கை!

......காதலிக்கத்தான் வழி காட்டினாள் அந்தப் பொல்லாத அம்பிகை!

சுடர் வீசும் விழிகள், குங்குமம் பொலியும் பிறைநுதல், அழகிய நாசி சிறு இதழ்கள்—அடர்ந்த கூந்தலில் தழையத்தழைய குண்டுமல்லிகைப் பூச்சரம்......

சாதாரண அழகா அது? கண்களே, இத்தனை நாட்கள் உங்களைப் பட்டினி போட்டிருந்ததற்காக என்னை மன்னியுங்கள்! என்று கூறிக்கொள்ள வேண்டிய பேரழகு.

தினமும் ஆலயத்திற்குச் சென்று விளக்குகளுக்கு நெய் ஊற்றிவிட்டுச் செல்வாள் அந்த மங்கை. அன்று—

நெய்யை ஊற்றிவிட்டு, அம்பிகையைத் தொழுதுவிட்டுத் திரும்பினாள் அவள். “கிண்ணம் வேண்டாமா?...” என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டான் பாண்டியன்.

நினைவு மறதியாக கிண்ணத்தைக் கீழே வைத்துவிட்டுக் கிளம்பியதை ஒரு ஆடவன் சுட்டிக் காட்டியதும் அவளுக்கு நாணம் பிய்த்துக் கொண்டு வந்தது. கிண்ணத்தை எடுத்துக்கொண்டு விடுவிடென்று நடந்தாள் பார்வதி.

மறுநாள் அவள் சந்நிதிக்குள் நுழைந்தபோது பாண்டியன் தயாராக நின்றிருந்தான். அவளைப் பார்த்ததும் சிரித்தான். அவளும் மென்னகை புரிந்தாள்.

கோவிலினுள் தொடங்கிய சந்திப்பு கோவிலுக்கு எதிரே மாந்தோப்பினுள் நேரம் போவதே தெரியாமல் பேசும் வரையில் வளர்ந்து விட்டது.

மாந்தோப்புக்குள் ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்றுதான் ஆற்றிலிருந்து நீர் கொண்டு வர வேண்டும். காலை மாலை இரு வேளைகளும் குடத்துடன் நீர் எடுக்கச் செல்லும் அவளைப் பாண்டியன் மாந்தோப்பில் சந்திப்பான். “இப்படியே நாம் ரகசியமாகச் சந்தித்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?...” என்று ஒருநாள் பார்வதி கேட்டாள்.

வேதனையோடு தன்னையே பார்த்துக் கொண்டான் பாண்டியன்,

“நான் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஏழை டிரைவர். பார்வதி! நிலையான வேலை இன்னும் கிடைக்கவில்லை, இந்த நிலையில் பணக்காரரான உன் தந்தையிடம் வந்து எப்படிப் பெண் கேட்பது? அதற்குத் தகுதி சிறிதும் இல்லையே என்னிடம்?”

“...தகுதியோ தகுதியில்லையோ, அது நாம் காதலிப்பதற்கு முன்பு எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்! இப்போது எண்ணிச் சலிப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது?”

யோசித்தான் பாண்டியன். பிறகு, “சரி பார்வதி! நாளைக்கு நான் உன் தந்தையிடம் நம் திருமணம் பற்றிப் பேசுகிறேன்!” என உறுதியாகக் கூறிவிட்டு விடைபெற்றான்.

• • •

பாண்டியனுக்கு சந்தேகம். நிஜமாகவேதான் தன்னுடைய காதலியின் தந்தை பரந்தாமரிடம் பேசுகிறோமா என்று அவனுக்கு ஐயமாக இருந்தது,

அவர் கூறினார்: ‘இதோ பார் தம்பி! நீ சொல்வதெல்லாம் சரி தான். உனக்கு என் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதில் எந்த ஆட்சேபணையும் எனக்கில்லை ......”

.........கண்டிப்புக்காரப் பேர்வழி. லேசில் மசியமாட்டார் என்றெல்லாம் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தவன் நெஞ்சில் குளிர் மழையாய் ஈரம் பாய்ச்சியது அவரது பேச்சு.

“பார்வதியும் நீயும் மாந்தோப்பிலே ரகசியமா சந்திக்கிறீங்கன்னு அரசல்புரசலா என் காதில் விளுந்துச்சு. நீ நல்லவனோ, கெட்ட எண்ணத்துடன் பழகுபவனோ என்று குழம்பிக்கிட்டிருந்தேன். நீயாகத் துணிந்து என்னிடம் வந்திருப்பதைப் பார்த்தால் நல்ல பையன் என்று எனக்குத் தெரிகிறது. அவளை உனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதிலே எனக்கு ஆட்சேபணையில்லை. அதிலே ஒரு சிக்கல் இருக்கு...”

பாண்டியன் திகைத்தான். அவர் மேலே தொடர்ந்தார்.

“நான் பணக்காரன்னு நீ [illegible] யில்லே. ஊரே நெனைச்சுகிட்டு [illegible] ஆனா எல்லாப் பணத்[illegible]யு சூதாட்டத்தில் அழிச்சிட[illegible] நான். இப்போ நான பார்வ[illegible]

தாய்மாமனிடம் ரூபா ரெண்டாயிரத்துக்குக் கடன் பட்டிருக்கேன். இன்னும் ஆறே மாதத்தில் பணத்தைக் கொடுத்திடறதா ஒப்புக் கொண்டிருக்கேன். நல்லா யோசிச்சுச் சொல்லு. இந்த ஆறு மாசத்தில் ஒன்னாலே ரெண்டாயிரம் புரட்ட முடியுமா?

ஆறு மாதம் அதற்குள் ரூபாய் இரண்டாயிரம்! பாண்டியனின் மூளை கிறுகிறுவெனச் சுழன்றது.

"என்ன தம்பீ, மலைச்சுப் போய் நின்னுட்டே?..."

ஒரு உடம்பலில்சிலிர்த்துக்கொண்டு எழுந்தான் பாண்டியன். "ரூபாய் இரண்டாயிரம்தானே! நிச்சயமா ரூபாயோடு வர்றேன்!" என்று ஆவேசமாகக் கூறிவிட்டு அப்போது கிளம்பியவன்தான்—கிட்டத்தட்ட பைத்தியக்காரனாகவே மாறிவிட்டான்.

ரூபாய் இரண்டாயிரம்!...அவன் கனவிலும் நனவிலும் சுழன்ற தாரக மந்திரம் ரூபாய் இரண்டாயிரம்!...

கெஞ்சாத கெஞ்சு கெஞ்சி, சிபாரிசு பிடித்து 'கற்பகம் லாரி சர்வீ'சில் வேலை வாங்கிக் கொண்டான் பாண்டியன். இரவு பகலாக இரத்தத்தை உயிர்மூச்சு ஆக்கிப் பாடுபட்டான். ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தான். அவனுடைய திறமையையும், அயராது உழைக்கும் தன்மையையும் கண்டு வியந்தார் லாரி முதலாளி.

நாள் நெருங்க நெருங்க வேகம் அதிகரித்தது.

பார்வதியின் தகப்பனுக்கு வாக்குத் தந்திருந்தபடி இரவிலும் அதிகப்படி வேலை செய்து, மிகக் கஷ்டப்பட்டு இந்த ஆறுமாதகாலத்தில் ஆயிரம் ரூபாய் சேமித்து விட்டான். இன்னும் கெடுமுடிய ஒரு வாரம்தான் இருக்கிறது......! ஏழு நாட்களுக்குள் எப்படி ஆயிரம் சேர்ப்பது?

நள்ளிரவு...மூட்டைகளை நிரப்பிக் கொண்டு விழுப்புரம் 'ட்ரங்க்' சாலையில் லாரியைச் செலுத்திக்கொண்டிருந்தான் பாண்டியன்.

குறுக்கே நின்று இருவர் கையைக் காட்டினர், லாரியை நிறுத்தும்படி.

இரவு வேளைகளில் அடிக்கடி சோதனை நடக்கும் ஆதலால் அதிகாரிகள் நிறுத்தச் சொல்கிறார்களோ என்று லாரியை நிறுத்தினான். அந்த மனிதர்கள் பாண்டியனை இறங்கும்படிக் கூறி அவன் காதில் ஏதோ கிசுகிசுத்தனர்.

பாண்டியன் அந்த இருளில் அவர்களையும் அவர்கள் பக்கத்தில் இருந்த இரண்டு மூட்டைகளையும் பார்த்தான். அவர்கள் கூறிய விஷயத்தை மனதில் அசைபோட்டான்.

லாரியில் அடுக்கப்பட்டிருந்த மூட்டைகளோடு அந்த இரண்டு மூட்டைகளையும் கலந்து எடுத்துச் செல்லவேண்டுமாம். போகும் வழியில் திண்டிவனத்திற்கருகில் இறக்கிப் போட்டுவிட்டால் சுளையாக ஆயிரம் ரூபாய் கிடைக்கும்!

அபின் மூட்டைகள்! — கள்ளக் கடத்தல்; அரசாங்க விரோதமான செய்கை!

ஆனால் எளிய வேலை. பணமோ ஆயிரம் உடனே கிடைக்கும்! பாண்டியனுக்குத் தேவையானதும் ரூ. ஆயிரம்தான்! யோசனை, யோசனை, யோசனை!

"உம்..ஏற்றுங்கள்!...வெகு நேரத்திற்குப் பின் ஒப்புக்கொண்டான் பாண்டியன்.

மூட்டைகளோடு இந்த இரண்டு மூட்டைகளும் ஒன்றாயின. லாரியின் பயணம் துவங்கியது. அந்த இரண்டு மனிதர்கள் குட்டிகார் ஒன்றில் முன்னதாக விரைந்தனர்.

பாண்டியன் லாரியைத் திருப்பி நேராகச் சென்றான் எங்கே?—

காவல் நிலையத்துக்கு!

• • •

"டிரைவர் பாண்டியன்! உங்கள் நேர்மையைப் பாராட்டுகிறோம். சமுதாயப் பெருச்சாளிகளைக் கண்டு பிடித்துக் கொடுத்ததற்கு நன்றி. விரைவில் அரசாங்கப் பரிசு கிடைக்கும்!" என்றார் போலீஸ் கமிஷனர்

"கற்பகம் லாரி சர்வீஸ்' முதலாளி தங்கராஜ் பெருமையுடன் பாண்டியனைத் தட்டிக்கொடுத்தார்.

"பாண்டியன் உன் குணமும் கடுமையான உழைப்பும் நான் அறிவேன். உன்னைப் போன்ற உத்தமமான ஒருவனை டிரைவராக நான் அடைந்தது பற்றி சந்தோஷம் அடைகிறேன். அரசாங்கப் பரிசுக்கு முன்பு இதோ இப்போதே என்னுடைய பரிசை வாங்கிக் கொள்!..." என்று ஒரு 'செக்' எழுதி அவனிடம் நீட்டினார் முதலாளி.

"என் கடமையைச் செய்தற்கு எதுக்குங்க பரிசு எல்லாம்?" தடுமாறினான் பாண்டியன்.

"என் திருப்திக்காகக் கொடுக்கிறேன். வாங்கிக்கொள்கிறாயா, இல்லையா?...என்று முதலாளி அதட்டினார்.

தயங்கியபடியே 'செக்'கை வாங்கினான். இதயம் மகிழ்ச்சியால் திணறியது. சரியாக ரூபாய் ஆயிரம்!

அம்பிகையாகப் பார்த்து அவனுடைய தேவையை நிறைவேற்றி வைத்திருக்கிறாளா?...

முன்பே சேமித்திருந்த பணத்துடன், முதலாளி அவனுடைய நேர்மைக்குப் பரிசாக அளித்த பணத்தையும் சேர்த்தான். ரூபாய் இரண்டாயிரம்!

நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது. பார்வதி! உனக்காக நான் பணம் சேர்த்துவிட்டேன் பார்வதி! ...இதோ வருகிறேன் பார்வதி...

கிளீனர் செல்லத்தம்பி இடியைப் பாய்ச்சினான்,

"அண்ணே, சேதி தெரியுமா?... உங்க 'ஆளு'க்கு சீர்காழியில் நாளைக்குக் கல்யாணமாம். அவங்க தாய்மாமன் கிட்டே ஏதோ கடனாம். கடனைத் தீர்க்க வழியில்லென்னு பணத்துக்குப் பதிலாய் தாய்மாமன் அந்தப் பொண்ணையே கல்யாணம் கட்டிக்கிறானாம்!"

"பார்வதி!" அலறினான் பாண்டியன்,

பொழுது விடிந்தால் பார்வதி இன்னொருவனின் உடமையாகிவிடுவாள்...

"பாம்!...பாம்!" அரக்கனின் ஓலமாய் 'ஆரன்' சப்தம் ஒலித்தது. பிசாசைப்போல் லாரியைத் தலை தெறிக்கும் வேகத்தில் செலுத்தினான் பாண்டியன்,

மெல்லப்போ அண்ணே!...

மெல்லப்போ அண்ணே!......... சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டான் செல்லத் தம்பி.

பொழுது விடிய இன்னும் சிறிது நேரமே இருந்தது. ஆயிற்று...... சிதம்பரத்தைத் தாண்டியாகி விட்டது. வல்லம்படுகை, கொள்ளிடம் அடுத்து சீர்காழிதான்......

ஒழுங்காய் எதிலும் மோதிக்கொள்ளாமல் போய்ச் சேருவோமா என்று அஞ்சும்படியான வேகம்...'தடக்' கென்று லாரி நின்றது. இறங்கி என்ஜினைப் பரிசோதித்தான். ஊஹூம்! இனி லாரியை நம்பிப் பயனில்லை.

கீழ்வானம் பாலாய் வெளுத்துக் கொண்டு வந்தது. நிமிர்ந்து பார்த்தான் பாண்டியன். தொலைவிலிருந்து நாதசுர இசை காற்றில் இழைந்து வந்து அவன் காதில விழுந்தது.

சீர்காழி எல்லையை அடைந்து விட்டோம் என்பது தெரிந்து ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். இரண்டாயிரம் ரூபாய் அடங்கிய தோல்பையைக் கையில் எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தான் பாண்டியன்.

"பார்வதி! இன்னும் கொஞ்ச நேரம்... இத்தனைக் காலம் பொறுத்த நீ இன்னும் ஒரு அரைமணி... எனக்காகக் காத்திருக்க மாட்டாயா?...... பார்வதி, பார்வதி!..."

கல்யாணப் பந்தல். வாழைமரங்கள் முன்புறம். கல்யாணவீடு! இது தான் பார்வதியின் திருமணம் நிகழும் இடமோ?...

உள்ளே நுழைந்தான். சந்தனம் கொடுத்தார்கள். பன்னீர் தெளித்தார்கள். அதோ...பார்வதி! கண்ணுக்கெட்டிய தொலைவில் மணமேடையில பார்வதி — அவளுக்கு அருகில் மணமகன்!

"பார்வதி!..." அலற வாயைத் திறந்தான் பாண்டியன். "கெட்டி மேளம்! கெட்டி மேளம்!!" என்று யாரோ கத்தினார்கள். கூட்டம் அவனைப் பின்னுக்குத் தள்ளியது. அவன் குரல் எழும்பாமலே அழுந்தி விட்டது.

அவன் கண் எதிரிலேயே பார்வதி வேறு ஒருவனின் உடமையாகி விட்டாள். அவன் பிணைக்க வேண்டிய மங்கலக் கயிற்றை அவன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இன்னொருவன் பிணைத்து, பார்வதியைத் தனக்குரியவளாக்கிக் கொண்டுவிட்டான்.

அவன் அடிவயிறு கனன்று எரிந்தது. இனி பார்வதி வேறு ஒருவனுக்கு உரியவள்!

பாண்டியனின் மூளை குழம்பியது. தள்ளாடினான். ஒரு மூலையில் பரிசுகளை மணமக்களின் சார்பில் பெற்றுக்கொண்டு அதற்கு ரசீது வழங்கிக் கொண்டிருந்தார் ஒருவர்.

"மணமகளுக்கு அன்பளிப்பு ரூபாய் இரண்டாயிரம்!......என்று அவரிடம் தோல் பையை நீட்டினான் பாண்டியன்.

'பளிச்'சென்று நிமிர்ந்து வியப்புடன் பாண்டியனை நோக்கினார் அவர்! "உங்கள் பெயர்...?"

அதற்குப் பதில் கூறாமலேயே விடுவிடென்று கூட்டத்தை விலக்கிக்கொண்டு வெளியேறினான் அவன்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

யும், வன்முறைக் கொடுமைகளும், ஆர்ப்பாட்ட அரசியலும், ஆதிக்கப் போட்டிகளும் நாளும் நாளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றனவென்றால், போதகரின் போதனையை இதுவரையில் நாடு செவியேற்றுக் கொள்ளவில்லை என்றாகிவிடக்கூடும்.

அப்படி ஒரு நிலை உறுதி செய்யப் படுமானால், நூற்றாண்டு விழாவெடுத்து—சிறப்புப் பேசி, சீர்மைப் படுத்திக் காட்டுவதிலே பொருள் ஏதும் இருக்க முடியாது.

கடந்த அக்டோபர் 1-ம் நாளுடன் முதல் நூற்றாண்டு முடிவுற்று 2-ம் நாள் முதல், இரண்டாம் நூற்றாண்டு தொடங்கி விட்டிருக்கிறது.

பேசி மகிழ்ந்தது போதும்; செய்து மகிழ்வோம் என்று பேசுவோரும், பேசக் கேட்போரும் திட மனத்தோடு முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்;

உவமையாகப் பயன்படுத்தியது போதும்; உண்மையாய் வாழ்ந்து காட்டுவோம் என்று நாடும் மக்களும் வாழ்க்கை முறையில் துரிதமாக ஒரு மாற்றம் தேடிக் கொண்டாக வேண்டும்.

காந்தியடிகளின் நூற்றாண்டு விழாக் காலம் என்று பெருமை பேசுவதற்கும், பேசிய பெருமை தரும் இன்பம் வாழ்க்கையோடு இயைவதற்கும் இந்த மாற்றங்கள் துரிதமாக வந்தாக வேண்டும.

காந்தீய போதனை—அல்லது தத்துவங்கள் என்பன கூறிக் களிப்பதற்கல்ல—செய்துக் களிப்பதற்கேயாகும்.

> "பதவி வகிப்பதன் மூலம் கௌரவம் அதிகமாகலாம். அல்லது அதை முற்றிலும் இழக்க நேரலாம். முற்றிலும் இழக்காமலிருக்க வேண்டுமானால் அமைச்சர்களும். சட்டசபை உறுப்பினர்களும் தங்களது தனிப்பட்ட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். எல்லாவற்றிலும் அவர்கள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்"

—என்பது அரசியலாருக்கென்று காந்தியடிகள் கூறியவை. துணைக் கண்டத்து மாநிலங்களில் தமிழகம் நீங்கலாக மற்றும் அனைத்து மாநிலங்களுக்கும் இது பொருந்தக் கூடியதாகும். காரணம் அங்கெல்லாம் ஊழல் குற்றச் சாட்டுக்கள் நாளும் நாளும் மலிந்து வருகின்றன. காந்தீய நூற்றாண்டு வைபவங்கள், அந்த அரசியலாரை இதன் வழியில் சிந்தனை செய்யத் தூண்டுமானால் பயன் கிடைக்கும்.

> "தவறு ஏதாவது நேர்ந்தாலும் அதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு ஒரு ஜனநாயக நாட்டின் மக்கள் திருப்திப் பட வேண்டும். அவர்கள் விரும்பினால், அரசாங்கத்தை மாற்றலாம். ஆனால் அரசாங்கத்துக்கு எதிராகக் கலவரம் செய்து அரசாங்கத்துக்குத் தடையாக இருக்கக்கூடாது.

—என்பது ஜனநாயக நாட்டில் வாழ்கின்ற மக்களுக்காக காந்தியடிகள் கூறியவை. நாட்டின் நிலையென்ன? சிந்திக்கக் கிடைக்கும் பதில் எப்படி இருக்கிறது?

எனவே, இதற்கான விடைகளைத் தரக்கூடியதாக காந்தி நூற்றாண்டு விழா, அமைந்தால்தான் காந்தியடிகள் பிறந்ததற்கும் பொருள் உண்டு; தத்துவபோதனைகளைப் புரிந்ததற்கும் பொருள் உண்டு. விழா கொண்டாடுவதிலும் பொருள் உண்டு.

ஆனால், எது, எப்படி எப்படி நிகழ்ந்தாலும், வாழ்க காந்தியடிகள்! நிலைக்க அவர் புகழ்! என்று கூறிக்கொள்ள எல்லோரையும் போலவே நாமும் மகிழ்கிறோம்! கடமைப்படுகிறோம்!

★

11-ம் பக்கத் தொடர்ச்சி

தூ! இரண்டே இரண்டு ரூபாய்தானா! அதோ அண்டை வீட்டுக்காரியின் மகன் இன்று வைரமாலை அல்லவா சம்பாதித்துக்கொண்டு வந்தான், என்று கூறிடும் தாயும் உண்டா?

வைரமாலை — ஒரே நாளில் என் மகன் சம்பாதித்தான்—பலே பேர் வழி—என்று புகழ்ந்து பேசத்தான், எந்தத் தாயாருக்காவது மனம் வருமா?

தம்பி! நாம் பெற்ற 15, சந்தைமேட்டில் முட்டை சுமந்தவன் கொண்டுவந்து அன்னையிடம் தந்த இரண்டு ரூபாய்!

அதனால்தான், நாடு நம்மைக் கனிவுடன் வாழ்த்துகிறது—வரவேற்கிறது—பாராட்டுகிறது.

வைரமாலையைத் தட்டிப் பறித்துக் கொண்டுவந்த மகனை, வாழ்த்தி வரவேற்க முடியாத நிலையில் தாய் இருப்பது போல, காங்கிரஸ்காரர்களாலேயே, 150-இடங்களில் பெற்ற வெற்றி பற்றி பெருமையாகவும் பூரிப்பாகவும் பேச முடிவதில்லை!!

அண்ணன்,

(21—4—57 திராவிட நாடு இதழில்)

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

வழக்குத் தொடர்வதுதானே? அவர் சொல்வதோடு மட்டுமா இருந்தார்?

தெருவுக்குத் தெரு முச்சந்திக்கு முச்சந்தி பிள்ளையாரைப் போட்டு உடைககவில்லையா? அப்போதெல்லாம் நண்பர்கள் எங்கே போயிருந்தார்கள்? ஒருவர் தன் கருத்தைச் சொல்லுவதற்கும் — அந்தக் கருத்தை அவர் சிலையினருகில் எழுத்துருவில் வடித்துக் கொள்வதற்கும் உரிமையிருக்கிறதா என்பதை நாம் அப்புறம் தெரிந்து கொள்ளலாம்.

அதற்குமுன் பெரியார் கருத்துக்களைப்போல 'பிறர் மனம் புண்படும்' படியாகக் கருத்துக்கள் வெளியிட்டவர்கள் யார் யார் என்பதை அறிந்தால் நலமாகஇருக்கும் என்று நம்புகிறோம். நீதிமன்றத்தில் வழக்குத் தொடர விரும்பும் நண்பர்கள் அவர்கள் மீதும் சேர்த்து ஒரு வழியாகத் தொடர அது உதவியாயிருக்கும்! ஆனால் இப்போது அவர்கள் இல்லையே...!

இதோ பெர்னாட்ஷா: 'தேர்தலில் நிற்பவனெல்லாம் அயோக்கியன்கள்; வாக்களிப்பவனெல்லாம் சர்வ முட்டாள்கள்.'

“கிரிக்கெட் ஆட்டத்தில்பதினொரு முட்டாள்கள் விளையாடுகிறார்கள். அதைப் பதினொராயிரம் முட்டாள்கள் வேடிக்கைப் பார்க்கிறார்கள்.”

“சிகரெட்டின் ஒரு முனையில் நெருப்பையும் மறு முனையில் முட்டாளையும் பார்க்கலாம்.”

தேர்தலில் நிற்பவர்கள், கிரிக்கெட் ஆடுபவர்கள், அதனை வேடிக்கைப் பார்க்கிறவர்கள சிகரெட்பிடிப்பவர்கள் எல்லோரும் சேர்ந்து பெர்னாட்ஷாவின் மீது வழக்குத் தொடர்ந்திருக்கலாம். பாவம் தெரியாமல் விட்டுவிட்டார்கள்!

அடுத்து இயேசுநாதர்; “கோயில்கள் எல்லாம் கள்வர் குகைகள்”

அடுத்து மகாத்மா; “கோயில்கள் விபசார விடுதிகள்”

கோயில் தர்மகர்த்தாக்களும், கோயிலுக்குப் போய் வழிபடுபவர்களும் இயேசுவின் மீதும், காந்தியின் மீதும் வழக்குத் தொடர்ந்திருக்க வேண்டும். ஏனோ விட்டுவிட்டார்கள்.

அதற்கெல்லாம் சேர்த்து இந்துப் பத்திரிகையின் ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் கடிதம் எழுதும் நண்பர்கள் இப்போது வழக்குத தொடரலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

செய்யட்டும், அவர்கள் அப்படிச் செய்தால்தான் பெரியார் இராமசாமியின் பகுத்தறிவு இயக்கம் இந்த நாட்டில் வெற்றி பெற்றதா இல்லையா என்பது தெரிய வரும்!

பெரியார் சிலையடியில் எழுதப்பட்டிருக்கும் அவர் மொழியை அங்கிருந்து நீக்க வேண்டுமென்று வாதாடும் நண்பர்களை நாம் ஒன்று கேட்க விரும்புகிறோம்.

உங்கள் மனத்தை உறுத்துகிறது என்பதற்காக அந்த மொழிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்கிறீர்கள்; புரிகிறது. அதுபோலவே உங்கள் வேதங்களில் உங்களைத்தவிர மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்தும் வாக்கியங்கள் நிறைந்து காணப்படுகின்றனவே — அப்புறப்படுத்துகிறீர்களா?

இதோ எடுத்துக் காட்டுக்கு ஒன்று.

'பிராமணனுடன் சரிக்குச்சரியான ஆசனத்தில் உட்காரும் சூத்திரனை அவ்வாறு உட்கார அவனுக்கு உதவும் உடலுறுப்பைப் பழுக்கக் காய்ச்சிய இரும்பால் தீய்த்துவிட வேண்டும்; அல்லது அறுத்துவிட வேண்டும்'

இப்படிப்பட்ட 'வேதங்களை' மற்றவர்கள் பொறுமையோடு தாங்கிக் கொண்டிருக்கிறார்கள் — ஒரு நாள் இரண்டு நாளாக அல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக!

நீங்கள் சொன்னால் அது வேதம். நாங்கள் சொன்னால் அது பேதமா? நீங்கள் சொன்னால் மறைமொழி. நாங்கள்சொன்னால் குறைமொழியா?

அருள்கூர்ந்து சிந்தித்து அமைதி கொள்ளுங்கள் என வேண்டுகிறோம். ✻

---

## அமைதி

அமைதி மனிதனுக்கு இயற்கையாயுள்ள இன்ப நிலை; போர் அவனுக்கு இழிவு, அவமானம்.

—தாம்ஸன்.

அமைதி மதிப்புயர்ந்த ஒரு நகை. சத்தியத்தைத் தவிர வேறு எதைக் கொடுத்தாவது நான் அதை வாங்க விரும்புகிறேன்.

—எம். ஹென்றி.

அமைதிக்கும் வெற்றிகள் உண்டு; அவை போரின் வெற்றிகளை விடப் புகழில் குறைந்தவை அல்ல.

—மில்டன்.

அமைதியே கலைகளை வளர்த்து. செழிப்பை உண்டாக்கி, இன்பமான புத்துயிரளிக்கும் செவிலித் தாய்.

—ஷேக்ஸ்பியர்.

தத்துவங்களின் வெற்றியாலேயே அமைதி ஏற்படும்.

—எமர்ஸன்.



## அமரர் அண்ணா அவர்களின்

# "கலிங்கராணி"

என்ற சிறப்புமிக்க காவியம்,

2-11-69 முதல் தொடர் கதையாக

## "காஞ்சியில்"

தொடரவிருக்கிறது. முன்னதாகப் பதிவு செய்துகொள்க!

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
96, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.